CASH FOR GOLD
R-GOLD
Mob: 93457 93457


# THE KOVAI HERALD

திி கோவை ஹெரால்டு

RNI.Regn.No.TNBIL/2018/76255 | Postal No: CB/154/2024-26 | Kovai / Tirupur | thekovaiherald.co.in | facebook.com/Thekovaiherald

Volume 7 | Issue 41 | English & Tamil Weekly | 02.03.2025 Sunday | 6 Pages | Price Rs.3/-


CASH FOR GOLD
R-GOLD
Mob: 93457 93457

## போரை முடிவுக்கு கொண்டு வர ஜெலஸ்கியுடன் டிரம்ப் வார்த்தை போர்




ரஷ்ய உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்கா மேற்கொண்டு வரும் முயற்சியின் ஒரு பகுதியாக வாஷிங்டனில் நேற்று நடைபெற்ற அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி இடையேயான சந்திப்பு கடும் வாக்குவாதத்தில் முடிவுற்றது.

இந்தசந்திப்பின்போது,ஜெலென்ஸ்கியின் தவறான நடத்தையை டிரம்ப் குற்றம் சாட்டியதோடு, அவரது நடவடிக்கைமூன்றாம்உலகப்போரை தொடங்கவைக்கும் என்றுகூறியதைத் தொடர்ந்து பேச்சுவார்த்தை காரசார விவாதமாக மாறியது. இந்த சமயத்தில் பேசிய டிரம்ப், உக்ரைன் பெரிய சிக்கலில் உள்ளது. ஆனால் ,நீங்கள் எங்களுடன் இருந்தால், அதிலிருந்து வெளியேற உங்களுக்கு ஒரு வாய்ப்பு உள்ளது. சொல்வதைக் கேட்கவில்லை என்றால் ஆதரவு இல்லை . நீங்கள் லட்சக்கணக்கான உயிர்களோடு விளையாடுகிறீர்கள். மூன்றாம் உலகப் போரோடு விளையாடுகிறீர்கள். போரில் நீங்கள் வெல்லவில்லை. 350 பில்லியன் டாலர்களைஅமெரிக்காஉங்களுக்காக செலவு செய்தது. உங்கள் வீரர்கள் அமெரிக்க போர் கருவிகளை வைத்தே சண்டையிட்டார்கள். அது மட்டும் இல்லை என்றால் போர் ஒரே வாரத்தில் முடிந்திருக்கும். நான் ரஷ்யா மற்றும் உக்ரைன் மத்தியில் இல்லையென்றால் என்றால், நீங்கள் ஒருபோதும் ஒரு ஒப்பந்தத்தை செய்ய மாட்டீர்கள் என்று கூறினார்.

இறுதியில், நன்றி இல்லாமல் நடந்து கொள்வதாக கூறி உக்ரைன் அதிபர் மீது குற்றம் சாட்டிய டிரம்ப், உக்ரைன் குழுவினரை வெள்ளை மாளிகையிலிருந்து வெளியேற உத்தரவிட்டார்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் இந்த சந்திப்பு குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் கூறியிருப்பதாவது, 'அமெரிக்கா வழியாக உக்ரைன் போர் முடிவுக்குவருவதை அதிபர் விலாடிமிர் ஜெலன்ஸ்கி விரும்பவில்லை. அமைதிப் பேச்சுவார்த்தையில் அமெரிக்கா இருப்பதை பயன்படுத்தி, அவர் பேரம் பேச நினைக்கிறார். அமெரிக்க அதிபரின் ஓவல் அலுவலகத்திலேயே அவர் அமெரிக்காவை அவமதித்துவிட்டார். அவர் எப்போது அமைதியை விரும்புகிறாரோ, அப்போது மீண்டும் அமெரிக்கா வரலாம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ்நாட்டின் முதல் பெண் ஆம்னி பேருந்து டிரைவர்



என சில ட்ரென்டிங் விடீயோக்களை பார்த்திருக்கலாம். கொங்கு பகுதியை சேர்ந்த கனிமொழி அவர்கள் தான் தமிழ்நாட்டின் முதல் பெண் ஆம்னி பேருந்து பைலட்.

பொள்ளாச்சி டு சென்னை வழித்தடத்தில் இயங்கும் "அழகன் பஸ்" பேருந்து நிறுவனத்தை கனிமொழி மற்றும் அவரது கணவரும் இணைந்து நடத்துகின்றனர். ஏற்கனவே ட்ராவல்ஸ் தொழில் செய்து வரும் கனிமொழியின் கணவருக்கு சொந்தமாக ஆம்னி பஸ் வாங்கி ஓட்ட வேண்டும் என்பது நீண்ட நாள் கனவு. சமீபத்தில் அதற்கான வாய்ப்பு அமைந்தது.

பொள்ளாச்சிடுசென்னை வழித்தடத்தில் புதிய ஆம்னி பேருந்தை இயக்க ஆரம்பித்திருக்கிறார்கள். எம்.ஏ.பி.எல். முடித்து ஆசிரியர் பணியில் இருந்த கனிமொழி தனது கணவரின் இலட்சியத்தை நிறைவேற்றும் வகையில் அவரும் ட்ராவல்ஸ் தொழிலில் தன்னை இணைத்துக் கொண்டார். முறையாக பயிற்சி பெற்று ஹெவி டிரைவிங் லைசென்ஸ் வாங்கியவர், தங்களது சொந்த வண்டியில் முதல் ஆம்னி பேருந்து டிரைவராக களம் இறங்கியிருக்கிறார். தனக்கென்று புதிய பாதை அமைத்துக் கொண்ட கனிமொழி மற்றும் அவருக்கு உறுதுணையாக இருக்கும் அவரது கணவர் கதிர் அவர்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துகள்.

## முதல்வர் ஸ்டாலின் பிறந்த நாள் தாயாரிடம் ஆசி பெற்று கேக் வெட்டினார்

திி கோவை ஹெரால்டு



தி.மு.க. தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தனது 72-வது பிறந்தநாளை கொண்டாடுகிறார். அவருக்கு பிரதமர் மோடி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கனிமொழி எம்.பி., தமிழக அமைச்சர்கள் என பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.


பிறந்தநாளையொட்டி மெரினாவில் உள்ள அண்ணா, கலைஞர் நினைவிடங்களில் மலர்தூவி மரியாதை செலுத்திய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வேப்பேரியில் பெரியார் திடலில் உள்ள பெரியார் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

இதனிடையே, குடும்பத்தினருடன் கேக் வெட்டி பிறந்தநாளைக் கொண்டாடிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், கோபாலாபுரம் வீடு சென்று தாயார் தாயாளு அம்மாளிடம் ஆசிபெற்றார்.

தொடர்ந்து, செய்தியாளர்களை சந்தித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறுகையில், நேற்றைய தினம் நடைபெற்ற என்னுடைய பிறந்தநாள் விழா கூட்டத்தில் இந்தியா கூட்டணி தலைவர்கள் முன்னிலையில் தெளிவாக பேசியுள்ளேன். மாநிலத்தில் சுயாட்சி வேண்டும். இந்திதிணிப்பை கைவிட வேண்டும். இருமொழிக்கொள்கையை கொண்டு வரவேண்டும். இதுதான் என்னுடைய பிறந்தநாளுக்கான வாழ்த்து செய்தி.

வேற எதைப்பற்றியும் கவலைப்படவில்லை. என்னுடைய கவலை எல்லாம் நாட்டைப்பற்றி, மாநிலத்தை பற்றிதான் உள்ளது. மாநிலத்திற்கான உரிமையைபெறுவதுதான் என்றார்.

### அன்னை தெரசா பொன்மொழிகள்



- அன்புதான் உன் பலவீனம் என்றால் இந்த உலகின் மிகச் சிறந்த பலசாலி நீ தான்.
- அன்பை மட்டும் கடன் கொடுங்கள். அது மட்டுமே, அதிக வட்டியுடன் திரும்ப கிடைக்கும்.
- தண்டனை கொடுப்பதற்குத் தாமதம் செய். ஆனால், மன்னிப்பு கொடுப்பதற்கு யோசனை கூட செய்யாதே.
- உன் மேல் அன்பு செலுத்துகிறவர்களை நேசி. உன்மீது கோபம் கொண்டவர்களை அதைவிட அதிகமாக நேசி.

LAKSHAKA TEX LIMITED

## விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்த சீமான்

### வியந்து போன போலீஸ்



நடிகை விஜயலட்சுமி விவகாரத்தில் வளசரவாக்கம் போலீஸ் நிலையத்தில் ஆஜரான சீமானிடத்தில் உதவிஆணையர்செம்பேடு பாபு, துணை ஆணையர் அதிவீரபாண்டியன்மேற்பார்வையில்விசாரணைஅதிகாரி அன்புக்கரசு விசாரணை மேற்கொண்டார்.

முதலில் அவரிடம், அவரது பெயர், ஊர், திருமணம், மனைவி, குழந்தைகள், வேலை, அரசியல் உள்ளிட்டவை குறித்து கேள்வி எழுப்பி தகவல்கள் கேட்டு பெறப்பட்டது. தொடர்ந்து அவரிடம் நடந்த விசாரணை முழுவதும் வீடியோவில் பதிவு செய்யப்பட்டது. விஜயலட்சுமியுடன் திருமணம் குறித்த கேள்விக்கு, "விஜயலட்சுமியிடம் பழகியது உண்மை தான். ஆனால் திருமணம் செய்து கொள்வதாக நான் எந்த உத்தரவாதமும் கொடுக்கவில்லை. கோயிலில் கல்யாணம் பண்ணவில்லை. நான் கயல்விழியை கல்யாணம் செய்யும்போது பத்திரிகைகளில் முழு பக்க விளம்பரம் கொடுத்து, அழைப்பிதழ் அச்சடித்து செய்ததுதான் திருமணம். விஜயலட்சுமி குறித்து அரசியல் கட்சிகள், ஊடகங்கள் தான் எனக்கு எதிராக திட்டமிட்டு பேசி வருகிறார்கள். அவர்கள் தான் விஜயலட்சுமியை இயக்குகிறார்கள். மற்றபடி நான் திருமணம் செய்யவில்லை" என்று தெரிவித்தார்.

மேலும், விசாரணைக்கு சீமான் கொடுத்த ஒத்துழைப்பைகண்டுபோலீசாரே ஆச்சரியப்பட்டனர். போலீசாரிடத்தில் சீமான், இந்த வழக்க விசாரிக்க நீதிமன்றம் 12 வாரம் தான் கொடுத்துருக்கு. அதனால் தான் நீங்கள் அவசரபடுகிறீர்கள் என்றும் தெரியும், உங்களது கஷ்டமும் எனக்குப் புரிகிறது. இந்த வழக்கில் உங்களுக்கு முழுமையாக ஒத்துழைப்பை நான் கொடுப்பேன்

சுமார் 1.15 மணி நேரம் நடந்த இந்த விசாரணை முடிந்ததும், இறுதியாக ஒப்புதல்வாக்குமூலநகலில் கையெழுத்திடுமாறு சீமானைபோலீசார் கேட்டுள்ளனர். அதற்கு அவர் சில நிமிடங்கள் தயங்கியுள்ளார். இதை கண்ட விசாரணை அதிகாரி, "நீங்கள் தான்கேள்விக்குபதில்அளித்தீர்கள்.அதுவீடியோவாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. நீங்கள் பேசியது தான் வாக்குமூலத்திலும் உள்ளது.

கையெழுத்திடுங்கள்" என தெரிவித்தனர். இதனையடுத்து தான், "அடுத்தகட்ட விசாரணைக்கு எப்போது அழைத்தாலும் வருவேன்" என்று அவரே எழுதி தனது வாக்குமூல நகலில் கையெழுத்துபோட்டுவிட்டு திரும்பியுள்ளார்.

## தயார் நிலையில் ரேஷன் கார்டுகள்...

### அமைச்சர் கண் அசைத்தால்தான் கிடைக்குமா?

திி கோவை ஹெரால்டு

கோவை மாவட்டத்தில் கடந்த ஆகஸ்ட் மாதம் முதல்புதிதாகரேசன்கார்டு வேண்டி விண்ணப்பித்தவர்களுக்கு ஆறு மாதங்கள்ஆகியும்இதுவரைபுதிய ரேஷன் கார்டுகள் வழங்கப்படாமல்மக்கள் அலைகழிக்கப்பட்டு வருகின்றனர். புதிதாக விண்ணப்பித்த ரேஷன் அட்டைதாரர்களின் செல்போனுக்கு உங்களுடைய ரேஷன் கார்டு ரெடியாக உள்ளது. அந்தந்த தாலுக்கா அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்றும், ரேஷன் கார்டு எண்ணுடன் குறுந்தகவல் அனுப்பப்பட்டுள்ளது.

ஆனால் சம்பந்தப்பட்ட தாலுக்கா அலுவலகங்களில்நேரில் சென்று கேட்டால், இதுவரை உங்களுடைய ரேசன் ஸ்மார்ட் கார்டு எங்களுக்கு வரவில்லை. ஆனால் உங்களுக்கு எஸ் எம் எஸ் வந்துள்ளது.

கார்டு வந்தவுடன் உங்களுக்கு நாங்கள் போன் செய்கிறோம் என்று கூறி திருப்பி அனுப்பி வருகின்றனர். ஆனால் உண்மை நிலவரம் என்னவென்றால் , கடந்த 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் புதிதாக ரேஷன் கார்டு வேண்டி விண்ணப்பித்த அனைவருக்கும் கடந்த நவம்பர் மாதமே புதிதாக ரேஷன் ஸ்மார்ட் கார்டுகள் வந்துள்ளன.

கடந்த மூன்று மாதங்களாக கோவை மாவட்ட பொறுப்பாளரான அமைச்சர் செந்தில் பாலாஜியின் அனுமதிக்காக ரேஷன் கார்டுகளை வழங்காமல் அந்தந்த தாலுக்கா அலுவலகங்களில் வைத்துள்ளதாக கூறப்படுகிறது.

சம்பந்தப்பட்ட அமைச்சர் எப்போது அனுமதி அளிப்பார்? எப்போது எங்களுக்கு ரேஷன் கார்டு கிடைக்கும் என்று பொதுமக்கள் விடை தெரியாமல் உள்ளனர். வருகிற ஏப்ரல் மாதம் முதல் புதிதாக தங்களுடைய குழந்தைகளை பள்ளியில் சேர்ப்பவர்களுக்கும் கட்டாயமாக ரேஷன் கார்டு தேவைப்படுகிறது. இதனல், தங்களுக்கு ரேஷன் பொருள் வழங்க விட்டாலும் பரவாயில்லை ரேஷன் கார்டு கிடைத்தால் மட்டும் போதும் என்று வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

கோவை மாவட்டத்தில் மட்டும் பத்தாயிரம் கார்டுகள்தயாராகஉள்ளன. சூலூர், மேட்டுப்பாளையம் ,கோவைவடக்குதாலுக்கா அலுவலகங்களில் 1500 கார்டுதயாராக உள்ளதாக கூறப்படுகிறது.




## KMCH Surgeons perform a rare, life-saving surgery

THE KOVAI HERALD

A 31-year-old labourer underwent a life-saving procedure at the Kovai Medical Centre and Hospital. This young man had been experiencing abdominal pain for a few days, which doctors at another hospital initially diagnosed as a kidney infection.

However, as his condition worsened and swelling developed in both legs, he was referred to KMCH hospital. A CT scan revealed that the veins in both legs and the main veins draining blood to the heart were completely blocked by blood clots.


The patient was referred to the team of specialists comprising Dr. Mathew Cherian, Dr.Pankaj Mehta, and Dr. Santhosh and Dr. Vikram of the Division of Interventional Radiology at KMCH.

A novel procedure using the Lightning Aspiration Catheter procedure began with a small incision in the vein near the knee. A large suction tube (approximately 5 mm) was inserted into the clot, and the suction motors were guided by computer-aided technology in the angiography room. The clots were cleared on both sides of the patient's body after a three-hour slow aspiration.

This involved clearing the clot from both legs and abdominal veins, as well as the veins that originate from the kidneys.

Speaking on the occasion, Dr. Nalla G Palaniswami, Chairman & Managing Director, KMCH and Dr. Arun Palaniswami, the Executive Director of the Hospital, congratulated the team of doctors for performing the unique surgery.

## 11th Dr. Purani Endowment Lecture at Dr. N.G.P. Arts and Science College




THE KOVAI HERALD

The Department of Hospital Administration at Dr.N.G.P. Arts and Science College in Coimbatore, organized 11th Dr. Purani Endowment Lecture on "Building a Culture of Safety in Hospitals: The Role of Healthcare Professionals".

Dr. V. Uma, Head of the Department of Hospital Administration, welcomed the gathering.

The Presidential address was delivered by Dr. Nalla G Palaniswami, Chairman and Managing Director of KMCH, Coimbatore along with Dr. Thavamani D Palaniswami, Secretary Dr. N.G.P. Arts and Science College. The gathering was felicitated by U.K. Anantha Padmanathan, Director & CEO, Tenxhealth Technologies and Dr. P. R. Muthuswamy, Director of Academics, Dr. NGP Educational Institutions.

The Chief Guest Dr. Lallu Joseph, Secretary General CAHO, Quality Manager and Associate GS, CMC Vellore addressed the gathering.

The lecture concluded with a vote of thanks delivered by U. Suji, Assistant Professor in the Department of Hospital Administration.

Students of various disciplines like Bioscience, Commerce and Management participated in the program.

## Airports Authority of India grants NOC for the construction of cricket stadium

THE KOVAI HERALD


The Airports Authority of India has granted a no-objection certificate for the construction of an international cricket stadium in Coimbatore.

Tamil Nadu Chief Minister M.K. Stalin had promised during the last Lok Sabha election that a world-class international cricket stadium would be built in Coimbatore. Out of the four locations selected for this, the 20.72 acre land of Ondipudur Open Prison was finally selected.

Following this, Tamil Nadu Deputy Chief Minister Udhayanidhi inspected the work being done to build an international cricket stadium in Coimbatore and held a consultative meeting for the same. Following that, an application was made to the Airports Authority of India seeking a no-objection certificate for the construction of an international cricket stadium. Following this, the Airports Authority of India has granted a no-objection certificate for the construction of an international cricket stadium in Coimbatore. Due to this, the Tamil Nadu Sports Department is taking necessary steps to finalize the design for the international cricket stadium within the next week. Meanwhile, the Tamil Nadu government had also sought public opinion regarding this international cricket stadium. It is noteworthy that a large number of the public participated in this online survey and posted their opinions welcoming the international cricket stadium in Coimbatore.

## Blossom Literary Magazine released at Sri Ramakrishna College of Arts & Science

THE KOVAI HERALD



The English Literary Club, Lit-Aura Club & Read to Lead Club of the PG & Research Department of English of Sri Ramakrishna College of Arts and Science, Coimbatore conducted the prize distribution ceremony and the release of the Literary Magazine 'Blossom' under the title 'Celebrating Milestones 2024-25' at the College Campus.

The Principal & Secretary Dr.B.L.Shivakumar presided over the event and released the Department's Literary Magazine 'Blossom'. Prizes were distributed for the winners of various competitions conducted by the English department all through the year.

Various events such as Lit Parade, Tableau, Ship Wreck, Drama, Quiz and Connections were conducted by the students of the English department during the events.

The participants and winners in competitions held in various colleges in and around Coimbatore were felicitated during the event.

## Construction Works for the Semmozhi Park going on actively

THE KOVAI HERALD

The Principal Secretary (Municipal Administration and Water Supply Department) of the Government of Tamil Nadu, Karthikeyan , visited the Semmozhi Park project in person a few days ago, and inspected it.

Meanwhile, Coimbatore Corporation Commissioner Sivaguru Prabhakaran inspected the premises. This project has been divided into the first phase (45 acres) and the second phase (120 acres), and the first phase of the work is currently underway.

Out of the 45 acres in the first phase, 25 acres will be covered by 23 unique gardens. A total of 2.5 lakh saplings are planned to be planted in this park. For this, about 60,000 saplings have recently been received from Rajahmundry, Andhra Pradesh. Plants are being planted in the places where the construction work has been completed. The water required for the plants to be planted in the Semmozhi Park is being supplied by a 6-kilometer pipeline from the Ukkadam Wastewater Treatment Plant.

A 1,000-square-foot world-class multi-purpose conference center, an open-air auditorium, a parking facility for 300 cars, an artificial fountain and other structures are being built on the remaining 20 acres of land. So far, the entrance ticket building in the Semmozhi Park has been completed to the extent of 65% as well as the open-air auditorium to the 80%, the compound wall to the 95%, three toilets to the 80%, the underground water tank to the 100%, the gardeners' room to the 60%, the restaurant to the 60%, the entrance gate to the 80%, and the retail outlet to the 60%.

The construction of underground water tank, rainwater drainage, electricity and communication pipes and additional development works in the Semmozhi Park complex have been completed to the extent of 30% and the remaining works are in progress. An order has been issued for the procurement of audio and video systems and equipment and is in process. And till now, 73% of the work has been carried out.

The area of the conference center is 4830 square meters. It is designed to accommodate a thousand people at a time. It is designed with a separate path for important figures, a dining hall, a meeting hall, a guest room and various features. The ground floor parking area is designed for an area of 17007.91 square meters. It is designed to park 380 four-wheelers and 10 buses.

## O by Tamara Coimbatore Unveils 'High Dive': The City's Chic New Bar

THE KOVAI HERALD

O by Tamara, Coimbatore proudly introduces High Dive, a stylish and inviting bar that offers a refined yet lively atmosphere. High Dive is the ideal destination for after-work drinks, weekend gatherings, and relaxed evenings, featuring premium spirits, expertly crafted cocktails, and a curated selection of small plates. With plush seating and warm lighting, it provides a sophisticated setting for guests to unwind and indulge.

Umapathy Amirtham, General Manager of O by Tamara Coimbatore, launched the new bar. Conveniently located on the ground floor of O by Tamara Coimbatore, High Dive is set to become a go-to spot for those seeking an elevated bar experience in the city.

## KDM's Kumbh Digital Mela integrates tech with culture

THE KOVAI HERALD

KDM, the leading lifestyle & mobile accessories brand in India, is further cementing its role in shaping the success of Maha Kumbh 2025 by enduring and meaningful touchpoints with Kumbh Digital Mela. Kumbh has transformed as 'Bharat Ka Spiritual Charger' with the religious gathering attracting devotees from across India. Prayagraj, Uttar Pradesh, the Mahakumbh Nagar was set to be a spectacle with mobile charging stations provided by KDM in over 90 tents. N D Mali, Founder of KDM, B H Suthar, Co-Founder of KDM made the announcement of the new charger.

**Donate Organs!!! Let your life go on in someone's body!!!**

## Zepto Expands Across Tamil Nadu

THE KOVAI HERALD

Zepto, India's fastest-growing quick commerce platform is deepening its presence in Tamil Nadu, expanding beyond Chennai to Coimbatore, Tiruchirappalli, Madurai, Vellore, and Salem.

With 20+ dark stores now operational in Tamil Nadu, each store is strategically positioned to optimise delivery routes within a 2-3 km radius, allowing delivery partners to maintain a safe and efficient speed of 15-20 km/h while upholding Zepto's 10-minute delivery promise. Divesh Sawhney, Chief Growth Officer, Zepto, expressed happiness on the expansion.

## Benefits of Sambrani and its supporting Ancient Science

THE KOVAI HERALD


Dheepa Ravikumar

Indian culture and Ayurveda have incorporated Sambrani, which is also known as benzoin resin, into their practices for centuries. Originating from the Styrax tree, this fragrant resin has many uses, including purification properties, as well its medicinal benefits and use in recitation of religious hymns and prayers. Sambrani has been used for thousands of years, as evidenced by its frequent use in historical texts from ancient Indian, Southeast Asian, and Middle Eastern cultures.

Smoke produced by Sambrani, a fire extruder, contains natural chemicals like benzoic acid and cinnamic acid that have antimicrobial properties.

Sambrani is a powerful air purifier that can prevent the growth of harmful microorganisms such as bacteria, fungi and viruses. Traditional Ayurvedic use includes treating respiratory distress, pain, and wounds.

Sambrani's scent is believed to have a relaxing effect, as it not only provides medicinal benefits but also helps with relaxation and enhances focus. People frequently utilize it during meditation or prayer to create a tranquil and sacred



atmosphere.

Sambrani has been present in different forms, each with its own unique characteristics and applications. Several crucial categories comprise:

A natural, unadulterated resin known as Paal Sambrani is highly sought after.

The Sambrani Cups & Dhoop range is made up of simple products that blend different herbs and resins.

Cow Dung Sambrani Cups - Loban Guggul, infused with fenugreek, myrrh, and charcoal, possessing both aroma and health benefits.

Sambrani and Javadhu Herbal Cups made from charcoal are infused with herbal components and possess distinct scents and therapeutic benefits.

The practice of Sambrani is incorporated into daily life and spiritual practices. Sambrani is still consumed as a household dish and in the temple.' It is employed in prayers, meditation, and rituals of purification.? Many believe that the spiritual smoke exudes a sense of calmness and dispels negative energy, leaving it feeling peaceful. During festive and special days, it is believed that lighting Sambrani brings fortune and adds a divine dimension to festivities.

Modern studies confirm that Sambrani is a natural purifier of the air.' Its smoke has the ability to clean the air and kill airborne bacteria, acting as a natural disinfectant. Its effectiveness as an insect repellent makes it a chemical-free option in comparison to commercial products.'

Despite its immense benefits, Sambrani should always be used in an open setting, especially for those who are sensitive to smoke. A timeless practice in a contemporary setting. Even in changing times, Sambrani is still highly valued for its fusion of science and wellness with spiritual essence. Why?

## iQOO Neo 10R to launch with Snapdragon 8s Gen

THE KOVAI HERALD

iQOO, the high-performance smartphone brand, is set to launch the iQOO Neo 10R on 11th March. At its core, the iQOO Neo 10R is powered by the Snapdragon 8s Gen 3 processor, built on advanced 4nm TSMC process technology, delivering high efficiency and fast performance.

With an AnTuTu score of 1.7 Mn+, it stands as the most powerful device in its segment*.

Built for gaming enthusiasts, the iQOO Neo 10R delivers a stable 90FPS gaming experience for up to 5 hours.

It is equipped with a 6043mm vapor cooling chamber for efficient heat dissipation and an industry-leading 2000Hz instant touch sampling rate, ensuring ultra-responsive controls. Additionally, a dedicated e-sports mode optimizes performance for competitive gaming, delivering a smooth and immersive experience.

## Kumaraguru Institutions host 5-th Defence Career Expo



THE KOVAI HERALD

With the intent to create awareness among college students about career and business opportunities in the defence sector, Kumaraguru Institutions, Coimbatore, is organizing the fifth edition of the Defence Career Expo as part of Yugam 2025, its renowned techno-cultural-sports fest.

The two-day event has drawn 550 NCC cadets from 25 colleges across Tamil Nadu. The expo features insightful addresses from distinguished officers of the Indian Army, Navy, Air Force, and Coast Guard, offering cadets a comprehensive understanding of defence career opportunities. Beyond career guidance, sessions will cover topics such as Capability Development in Defence and Its Relevance to Industries; AI and its Role in Modern Warfare, etc. Adding to the experience, the event includes weapons display by INS Agrani, 35 Field Regiment, and the Madras Regimental Centre, along with military band performances.

Commodore B. Balasundaram, Director of the Centre for Indigenisation and Self Reliance (CISR) - Indian Navy, inaugurated the event as the Chief Guest. Rear Admiral V Mohandoss, Director, Defence Projects, Kumaraguru Centre for Industrial Research and Innovation (KC.IRI), Kumaraguru Institutions was present during the occasion.

FOR NEWS Publication
9244317182
04223147962

# முதலீட்டாளர்கள் பணத்தில் தமன்னாவுக்கு 25 லட்சம், காஜலுக்கு 18 லட்சம்

## கோவை வாலிபர்களின் தில்லாலங்கடி



தி கோவை ஹெரால்டு

கோவையைச் சேர்ந்த ஹாஸ்பே நிறுவனம் கிரிப்டோகரன்சியில்முதலீடு செய்தால் மிகப்பெரிய லாபம் கிடைக்கும் என வாக்குறுதி அளித்து முதலீட்டாளர்களை ஈர்த்துள்ளது. கடந்த 2022-ம் ஆண்டு கோவையில் ஹாஸ்பே நிறுவனத்தின் தொடக்கவிழாவில்நடிகை தமன்னா உள்ளிட்ட சினிமா பிரபலங்கள் பங்கேற்றுள்ளனர்.

பிரபல நடிகையான காஜல் அகர்வால் மூலம் தங்களிடம்முதலீடுசெய்த ஏராளமானோருக்குசொகுசு கார்களை பரிசாக வழங்கி, அதிக முதலீட்டாளர்களை கவர்ந்துள்ளார்கள். உண்மை என்று நம்பி பலர் பணம் முதலீடு செய்துள்ளனர். இப்படி டெல்லி, ஒடிசா, மகாராஷ்டிரா உள்பட நாட்டின்பல்வேறுபகுதியில் இருந்து ரூ.50 கோடி வரை முதலீடு பெற்றுள்ளனர். கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை நம்பி முதலீடுசெய்தவர்களுக்கு 'ஹாஷ்பே' நிறுவனத்தால் பணத்தை கொடுக்க முடியவில்லை.

இதனால் முதலீட்டாளர்களுக்கு உறுதியளித்தபடிபணத்தை கொடுக்க முடியாமல், அவர்கள் நிறுவனத்தை மூடிவிட்டனர். எனினும் ஹாஷ்பே நிறுவன வங்கி கணக்கில் உள்ள பணத்தை வைத்துக் கொண்டு மோசடி கும்பல் ஜாலியாக இருந்துள்ளது. இந்த நிலையில், புதுச்சேரியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற பிஎஸ்என்எல் ஊழியர் அசோகன் 98 லட்சம் ஏமாந்ததாக புதுவை சைபர் கிரைம் போலீசார் புகார் செய்தார். போலீசார் வழக்குப்பதிவு செய்து மோசடி பேர்வழிகளை தேடினர். கோவையில் நட்சத்திர ஓட்டலில் மோசடியில் தொடர்புடைய நித்தீஷ் ஜெயின் அரவிந்த்குமார் இருப்பது தெரியவந்தது. இதையடுத்து, அங்கு சென்று அவர்களை கைது செய்தனர்.

அவர்களிடம் நடத்திய விசாரணையில், திறப்பு விழாவில்பங்கேற்றநடிகை தமன்னாவுக்குரூ.25லட்சம், காஜல்அகர்வாலுக்குரூ.18 லட்சம் என மொத்தம் 43 லட்சம் வழங்கியதாக கூறியுள்ளனர். இது தொடர்பாக நடிகை தமன்னா, காஜர் அகர்வாலை விசாரிக்க போலீசார் முடிவு செய்துள்ளனர்.

# 2026-ல் த.வெ.க. தனித்து போட்டி

## விஜய் ஆட்சியை பிடிப்பார்: பிரசாந்த் கிஷோர்



அடுத்த ஆண்டு நடைபெறஉள்ளசட்டசபை தேர்தலை எதிர்நோக்கி அரசியல்கட்சிகள்தீவிரமாக பணியாற்றி வருகின்றன. தேர்தல்பிரசாரம், வியூகம், பூத்கமிட்டி, வாக்காளர்கள் சேர்ப்பு,கூட்டணிஉள்ளிட்ட பணிகளில் அரசியல் தலைவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது அரசியல் களத்தில் இறங்கியுள்ள விஜய் கட்சியை பலப்படுத்தும் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். இதனிடையேசட்டசபைதேர்தலில் அ.தி.மு.க.வுடன் கூட்டணி தொடர்பாக விஜய் பேச்சு வார்த்தை நடத்துவதாக தகவல் வெளியானது. அத்தகவலை த.வெ.க.வினர் மறுத்து உள்ளனர். 2026-ல் முதலமைச்சர் வேட்பாளராக விஜயை முன்னிறுத்தி தேர்தலை சந்திக்கவே திட்டமிட்டுள்ளதாக த.வெ.க.வினர் கூறினர்.

இந்தநிலையில்,2026-ம் ஆண்டு நடைபெற உள்ள தேர்தலில்விஜயின்த.வெ.க. தனித்துபோட்டியிடும்என்று அக்கட்சியின் தேர்தல் வியூகவகுப்பாளர்பிரசாந்த் கிஷோர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறியிருப்பதாவது:- விஜயுடன் கூட்டணி அமைக்க அ.தி.மு.க. விருப்பம்தெரிவித்துள்ளது. ஆனால் 2026-ம் ஆண்டு தேர்தலில் அ.தி.மு.க.வுடன் விஜய் கூட்டணி இல்லை. தேர்தலில்த.வெ.க.தனித்து களம் காண விஜய் வியூகம் வகுத்துள்ளார்.

விஜய் தனித்து போட்டுயிட்டு ஆட்சி அமைப்பார் என்று தெரிவித்துள்ளார்.

# கோவையில் மொரீஷியஸ் இந்திய வர்த்தக மாநாடு




தி கோவை ஹெரால்டு

கோவையில் மொரீஷியஸ்இந்தியவர்த்தக மாநாடு நடைபெற்றது. இதில் மொரீஷியஸ் கௌரவ இந்திய வர்த்தக ஆணையளுரும்;, நேரு கல்வி குழுமங்களின் தலைவருமானவழக்கறிஞர் டாக்டர் பி. கிருஷ்ணதாஸ், இந்தியாவுக்கான மொரீஷியஸ் முன்னாள் அமைச்சரும் உயர் ஆணையருமான முகேஸ்வர் சூனி மற்றும் இந்திய பொருளாதார வர்த்தக அமைப்பின் தலைவர் டாக்டர் ஆசிப் இக்பால் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்திய மொரிஷியஸ் வணிக கருத்தரங்கை, இந்திய மொரிஷியஸ் வணிக கமிஷனர் மற்றும் தமிழ்நாடு கேரளா நேரு கல்வி குழுமங்களின் நிர்வாக அறங்காவலரான பி.கிருஷ்ணதாஸ் ஏற்பாடு செய்திருந்தார். இந்தியாவுக்கான மொரிஷியஸ் தூதுவரும் முன்னாள் அமைச்சரும், கோபியோ (இந்திய வம்சாவளி மக்களுக்கான உலக ஒருங்கிணைப்பாளருமான மூக்கிஸ்வுர் சூனே பங்கேற்றனர். கௌரவ விருந்தினராக இந்திய பொருளாதார வணிக நிறுவனத்தின் (ஐஇடிஓ) தலைவரும், மொரிஷியஸ் வர்த்தகம் மற்றும் வணிக துறை அமைச்சர் ஆசிப் இக்பால் பங்கேற்றார். இந்திய பொருளாதார வர்த்தக நிறுவனத்தின் தலைவர்,வணிககமிஷனர், இயக்குனர்கள், இந்திய, மொரிஷியஸ் அரசுகளின் பிரதிநிதிகள்பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில், கோவையை சேர்ந்த தொழில் அமைப்புகள், நிறுவனங்கள், ஜவுளி நிறுவனங்கள், பவுண்டரி சங்கங்கள், வணிக நிறுவனங்கள்பங்கேற்றன. இருதரப்பினருக்கும் இடையே ஈடுஇணையற்ற வணிக வாய்ப்புகளை பற்றி ஆராயவும், புதிய முதலீட்டுக்கான வாய்ப்பாகவும் இது அமைந்தது. இருநாடுகளுக்கும் இடையே முடிவுகளை மேற்கொள்ளும் முக்கியஸ்தர்களும் பங்கேற்றனர்.

# கட்டடங்கள் கட்டுமானம்: ஈஷாவுக்கு ஆதரவாக உச்சநீதிமன்றம் தீர்ப்பு

கோவையில் அமைந்துள்ள ஈஷா யோகா மையத்தில், 2006 – 2014 வரை விதிகளை மீறி கட்டடங்கள் கட்டியதாக, தமிழக மாசு கட்டுப்பாட்டு வாரியம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியது. இதற்கு எதிராக, ஈஷா யோகா மையம் தொடர்ந்த வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே அந்த நோட்டீசை ரத்து செய்தது.

இந்த உத்தரவை எதிர்த்து, தமிழக மாசு கட்டுப்பாட்டு வாரியம், உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. இந்த வழக்கு நீதிபதி சூரியகாந்த் தலைமையிலான அமர்வு முன், அப்போது, தமிழக அரசு சார்பில் ஆஜரான வழக்கறிஞர், 'ஈஷா யோகா மையத்தில், பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி அருகே கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. எனவே, இதிலுள்ள விதிமீறல்களை கண்டும் காணாமல் இருக்க முடியாது. இது இயற்கை சூழலை பெரிய அளவில் பாதிக்கும். விதிமீறல்கள் இருக்கிறதா, இல்லையா என்பதை முழுமையாக தெரிந்துகொள்ள வேண்டும். இதுபோன்ற நடவடிக்கைகளில் யாருக்கும் சலுகைகள் தரக்கூடாது' என, வாதிட்டார்.

தமிழக அரசின் வாதத்தை கேட்ட நீதிபதிகள், விதிமீறல் இருந்தால், யாருக்கும் எந்த சலுகையும் வழங்கக்கூடாது என்பதில் நாங்களும் உறுதியாக இருக்கிறோம். அதேநேரத்தில், இந்த விவகாரத்தில் ஏற்கனவே சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகளை புறக்கணித்து விட முடியாது.

எனவே, சென்னை உயர் நீதிமன்றத்தின் முந்தைய உத்தரவில் நாங்கள் தலையிட விரும்பவில்லை. தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் மனு முடித்து வைக்கப்படுகிறது. ஈஷா யோகா மையம், வருங்காலத்தில் எந்தவிதமான விதி மீறல்களிலும் ஈடுபடக்கூடாது. புதிதாக ஏதேனும் கட்டுமான பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றால், அதற்கான முன் அனுமதியை முறைப்படி பெற வேண்டும்.இவ்வாறு தீர்ப்பளித்தனர்.

# மக்களுக்குத் சிறந்த பொழுதுபோக்கு இடமாக மாறும் கோவை ரேஸ்கோர்ஸ்

சென்னையில் உள்ள மெரினா கடற்கரையைப் போலவே, கோவை ரேஸ் கோர்ஸ் பகுதி மக்கள் எந்த நேரமும் ஆரோக்கியநடைபயிற்சி, பொழுது போக்கு மற்றும் ஓய்விற்கு வருகின்ற ஒரு முக்கிய இடமாக அமைந்துள்ளது.

இங்குள்ள அழகிய மரங்கள், நடைபாதைகள், பூங்காக்கள் மற்றும் கட்டிடங்கள், சுற்றுப்புற சூழலுக்கு ஒருகருத்துக் கூடுதல்அழகையும்அமைதியையும் தருகின்றன. இந்த இடத்தின் சிறப்பு காரணமாக, நாளுக்கு நாள் வருகையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது, அதனைத் தொடர்ந்து வாகன போக்குவரத்தும் அதிகரித்துள்ளது.

வாகன போக்குவரத்து பெருகுவதால், சாலையோரங்களில் வாகனங்களைதாறுமாறாக நிறுத்தும் நடைமுறை, போக்குவரத்து நெரிசலை ஏற்படுத்தியுள்ளது. இதனை சமாளிக்க கோவை மாநகராட்சி, ரூ.9.5 கோடி மதிப்பீட்டில் பன்னடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. ரேஸ்கோர்ஸ் ரோடு, கே.ஜி. சிக்னல் அருகில் இந்தவசதிஉருவாக்கப்பட உள்ளது. இதன் மூலம் ஒரே நேரத்தில் 86 கார்கள் நிறுத்தப்படக்கூடிய வசதி ஏற்படுத்தப்படும். அதற்குடன், இருசக்கர வாகனங்களுக்கு தரைமட்டத்தில் தனியாக பார்க்கிங்வசதிஏற்படுத்தப்படும்.

காலை, மாலை நேரங்களில் நடைபயிற்சி செய்ய வருவோர் பெருகி வருகின்றனர். குழந்தைகள் பூங்காக்களில் விளையாட, காதலர்கள் மரங்களின் நிழலில் ஓய்வெடுக்க, பொதுமக்கள் சுற்றிவர ரேஸ்கோர்ஸ் சாலை முக்கிய இடமாக மாறியுள்ளது. புத்தாண்டு, வார இறுதி, திருவிழாக்கள் போன்றநேரங்களில்மக்கள் திரளாககூடுவதால், வாகன நெரிசல் அதிகரிக்கிறது.

தி கோவை ஹெரால்டு

இதனால் மாநகராட்சி, புதிய வாகன நிறுத்துமிடம் அமைப்பதற்கான திட்டத்தை முன்னெடுத்து வருகிறது.

கடந்த 10 ஆண்டுகளில், ரேஸ்கோர்ஸ்பகுதிபெரும் மாற்றங்களைகண்டுள்ளது. இந்தசுற்றுவட்டசாலையில் இரண்டுமுக்கியசிலைகள் அமைக்கப்பட்டுள்ளன ஒன்று ஜல்லிக்கட்டு காளையை அடக்கும் வீரரை காட்டுவதற்காகவும், மற்றொன்று உலக உருண்டையை சுற்றி நிற்கும்இரண்டுகரங்களை குறிக்கும் வகையில்.

ரேஸ்கோர்ஸ்பகுதியில் புதியவணிகநிறுவனங்கள், வாகன எண்ணிக்கையின் அதிகரிப்பு போன்றவை சாலை நெரிசலை அதிகரிக்க காரணமாக உள்ளன. பாதசாரிகள் செல்லும் நடைபாதைகள் ஆக்கிரமிப்புசெய்யப்படுவதால், போக்குவரத்து பிரச்சினை மேலும் மோசமாகிறது.உணவுக்கடைகள் மற்றும் தற்காலிக கடைகளும் இதற்குக் காரணமாக உள்ளதாக மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கோவை மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், சமீபத்தில் ஆய்வுமேற்கொண்டதைத் தொடர்ந்து, புதிய வாகன நிறுத்தத் திட்டம் உருவாக்கப்பட்டது. இதற்கான தமிழக அரசு ஒப்புதல் கிடைத்தவுடன் பணிகள்ஆரம்பிக்கப்படும். மேலும், ரேஸ்கோர்ஸ் விநாயகர் கோவில் அருகிலும் வாகன நிறுத்துமிடம் அமைக்க கோவை மாவட்ட கலெக்டரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டால், கோவை ரேஸ்கோர்ஸ் பகுதி மக்களுக்குத் திறந்த வெளிச்சமான பொழுதுபோக்கு இடமாக இருப்பதுடன், போக்குவரத்து நெரிசலையும் சரிசெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 'காக்கும் கரங்கள்' திட்டம் முன்னாள் படைவீரர்களின் குடும்பத்திற்கான புதிய உதவித் திட்டம்

முன்னாள் படைவீரர்களின் குடும்பத்தினருக்காக தமிழக அரசு 'காக்கும் கரங்கள்' என்றபுதியநலத்திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், கடன் பெற விண்ணப்பிக்கலாம் என்று மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர் அறிவித்துள்ளார்.

இந்தத் திட்டம், ஓய்வுபெற்ற முன்னாள் படைவீரர்களின் பாதுகாப்பான வாழ்க்கையை உறுதி செய்யவும், அவர்களின் வாழ்வாதார முன்னேற்றத்தை மேம்படுத்தவும் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் முன்னாள் படைவீரர்கள், மறுமணம் ஆகாத கைம்பெண்கள், படைவீரர்களின் கைம்பெண்கள், கணவரை இழந்த அல்லது கணவரைப் பிரிந்த முன்னாள் படைவீரர்களின் மகள்கள் போன்றோர் பயனடையலாம்.

புதிய தொழில்கள் தொடங்குவதற்கு தேவையான நிதியுதவியாக, இந்தத் திட்டத்தின் கீழ் முதலீட்டு கடன் தொகையில் 30% மூலதன மானியமும், 3% வட்டி மானியமும் வழங்கப்படும். அதிகபட்சமாக ரூ.1 கோடி வரை கடன் பெறலாம். முன்னாள் படைவீரர்களுக்கு அதிகபட்ச வயது 55 ஆகவும், கைம்பெண்கள், மணமாகாத மகள்கள் மற்றும் கணவரைப் பிரிந்த மகள்களின் வயது 21 முதல் 55க்குள் இருக்க வேண்டும்.

இந்தத் திட்டத்தில் சேருவதற்கான கல்வித் தகுதி மற்றும் வருமான வரம்பு போன்ற எந்த தேவையும் இல்லை. ஆனால், மத்திய அல்லது மாநில அரசின் இதேபோன்ற மற்றொரு திட்டத்தில் ஏற்கெனவே பயனடைந்தவர்கள் இந்த திட்டத்திற்கு தகுதியற்றவர்கள். இந்தத் திட்டம் குறித்த முழு விவரங்களை, மார்ச் 5-ஆம் தேதி மாலை 4.30 மணிக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெறவுள்ள கூட்டத்தில் விளக்கம் அளிக்கப்படும்.

பயனாளிகள், அதற்கான பிரத்யேக இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம். கூடுதல் தகவல்களுக்கு மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தை நேரிலோ, 0422-2974107 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம் என்று ஆட்சியர் அறிவித்துள்ளார்.

## மார்ச் மாதங்களில் சனிக்கிழமை பத்திரப்பதிவு அலுவலகங்கள் செயல்படும்

தமிழகத்தில் மார்ச் மாதம் முழுவதுமே பதிவுத்துறை சார்பில் அனைத்து சார்பதிவாளர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதில் மார்ச் மாதம் முழுவதும் வரும் அனைத்து சனிக்கிழமைகளிலும் பத்திரப்பதிவு அலுவலகங்கள் திறந்து இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி நாளை மார்ச் 1, 8, 15, 22 மற்றும் 29 என 5 சனிக்கிழமைகளிலும் பத்திரப்பதிவு அலுவலகங்கள் செயல்படும். மார்ச் மாதம் என்பதால் வங்கிகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் தங்களது கணக்குகளை நிறைவு செய்வார்கள்.

எனவே மார்ச் மாதம் முழுவதும் வரும் சனிக்கிழமைகளில் காலை 10 மணி முதல் மாலை ஆவணங்கள் பதிவு முடியும் வரை பத்திரப்பதிவு அலுவலகம் செயல்பட உள்ளது. விடுமுறை நாளில் ஆவணப்பதிவிற்கு கூடுதல் கட்டணம் சேர்த்து வசூலிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோவை அரசு மருத்துவமனையில் மீண்டும் போதை மறுவாழ்வு மையம்

தி கோவை ஹெரால்டு



கோவைஅரசுமருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்ஒருங்கிணைந்த போதை மீட்பு சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையம் மீண்டும் திறக்கப்பட்டது. இந்த மையத்தை கோவை மாவட்ட ஆட்சியர் பவன் குமார் க.கிரியப்பனவர் தொடங்கி வைத்தார்.

போதைப்பழக்கத்தைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. அதற்காக அரசுமருத்துவக் கல்லூரிகள் மற்றும் மாவட்ட மருத்துவமனைகளில் போதை மறுவாழ்வு சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

இந்தப் பகுதியில், சென்னை, மதுரை, கோவை உள்ளிட்ட 25 அரசுமருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் போதை மறுவாழ்வு மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. முதல்வர் மு.க. ஸ்டாலின் சென்னையில் இருந்து காணொலிக் காட்சி மூலம் இந்த மையங்களை திறந்துவைத்தார். பின்னர், கோவை மாவட்டத்தில் இந்த மையத்தை மாவட்ட ஆட்சியர் திறந்துவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் ரங்கநாயகி, துணை மேயர் வெற்றிச்செல்வன், மருத்துவமனை முதல்வர் நிர்மலா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மருத்துவமனை முதல்வர் நிர்மலா தெரிவித்ததாவது, கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 20 படுக்கைகள் கொண்ட போதை மறுவாழ்வு மையம் செயல்பட தொடங்கியுள்ளது. தேசிய சுகாதாரத் திட்டத்தின் கீழ் 'கலங்கரை' அமைப்பின் மூலம் இந்த மையம் செயல்படும்.

குறிப்பாக, கைப்பேசி மற்றும் கணினி பயன்படுத்தும் பழக்கத்தால் குழந்தைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்காக உளவியல் சிகிச்சை வழங்கும் வகையில் சிறப்பு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த மையத்தில் பணியாற்றுவோர் சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மனநல மருத்துவமனையில் பயிற்சி பெற்றவர்கள்.

மேலும், மனநல ஆலோசகர், உளவியலாளர், மனநல சமூக சேவகர், செவிலியர், மருத்துவமனைபணியாளர், சுகாதாரப் பணியாளர் மற்றும் காவலர்கள் எனும் குழுவினர் இந்த மையத்தில் பணியாற்ற உள்ளனர்.

போதைக்கு அடிமையானவர்கள் மட்டுமின்றி, அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் உளவியல் ஆலோசனை மற்றும் சிகிச்சை வழங்கப்படும். கொரோனா பெருந்தொற்றின் காரணமாக மூடப்பட்ட இந்த மையம், ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் செயல்பட தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வக்பு வாரிய திருத்த சட்டம்: நிர்வாக குழுவில் பெண்களுக்கும் இடம்.... திருத்தம் சொல்வது என்ன?

வக்பு வாரியம் என்பது இஸ்லாமிய மக்களால் தானமாக வழங்கப்பட்ட சொத்துக்களை நிர்வகிக்கும் ஒரு இஸ்லாமிய அமைப்பு ஆகும். இந்த சொத்துக்கள்மூலம்கிடைக்கும் வருவாய் இஸ்லாமிய மக்கள் நலனுக்கு பயன் படுத்தபடுகிறது.

இந்த வக்பு வாரிய விதிமுறைகளில் திருத்தம் கொண்டு வர மத்திய அரசு ஒருகுழுவைகடந்தவருடம் ஆகஸ்ட் மாதம் நியமனம் செய்தது. இந்த குழுவில் பாஜக மற்றும் NDA கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த 16 எம்.பி.க்களும், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 10எம்.பி.க்களும்இருந்தனர். இந்த குழு விரிவான ஆய்வு மேற்கொண்டு மொத்தம் 66 திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன.இதில் எதிர்க்கட்சிஉறுப்பினர்கள் முன்மொழிந்ததிருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப் படவில்லை என்று கூறப்படுகிறது. பிறகு இறுதியாக 22 திருத்தங்கள் இறுதி செய்யப்பட்டு, அதில் 14 திருத்தங்கள்மட்டும்கடந்த பட்ஜெட் கூட்டத்தொடரின் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இது மத ரீதியில் சிறுபான்மையினர்உரிமையில் தலையிடுவதாக உள்ளது என எதிர்க்கட்சிகள் தொடர் அமளியில் ஈடுபட்டு வருகின்றனர்.

வக்பு திருத்த சட்டத்திற்கு பல்வேறு எதிர்க்கட்சி அரசியல் தலைவர்களும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இப்படியான சூழலில், தற்போது நாடாளுமன்ற கூட்டு குழு தாக்கல் செய்த வக்பு வாரிய திருத்தங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த மசோதா வரும் மார்ச் 10ஆம் தேதி தொடங்கும் நாடாளுமன்ற கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒவ்வொரு வக்பு வாரியத்திலும் 2 இஸ்லாம் மதத்தை சாராதவர்கள் மற்றும் பெண்களும் வக்பு வாரியத்தில் இருக்க வேண்டும். தனமாக வழங்கப்பட்ட குறிப்பிட்ட சொத்து வக்பு வாரியத்தை சேர்ந்ததா என்பதை ஆய்வு செய்ய மாநில அரசின் அதிகாரி ஒருவர் அதனை உறுதிப்படுத்த வேண்டும்.

இப்படிபலதிருத்தங்கள் செய்யப்பட்டுள்தாகதகவல் உள்ளது.

## நாடு முழுவதும் பொதுவான ஓய்வூதிய திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசு திட்டம்

மத்திய அரசு இந்தியா முழுவதும் அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் பொதுவான ஓய்வூதிய திட்டத்தை செயல்படுத்த திட்டமிட்டு வருகிறது. இதன் மூலம் அமைப்பு சாரா தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைவரும் இதில் பயனடையலாம். ஏற்கனவேநிலவுகின்றஓய்வூதியதிட்டங்களை ஒரே கட்டமைப்பில் ஒன்றிணைப்பதற்காக, மத்திய அரசு "யுனிவர்சல் பென்சன் ஸ்கீம்" என்ற புதிய திட்டத்தைஉருவாக்கமுடிவெடுத்துள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், சுயதொழில் செய்பவர்கள் மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைவரும் தங்களது ஓய்வூதியத்திற்காக பங்களிக்கவும், அதை நிர்வகிக்கவும் செய்யலாம்.

இந்தத் திட்டத்தை ஊழியர் வருங்கால வைப்புநிதி அமைப்பு உருவாக்கிவருகிறது. தற்போது அரசு ஊழியர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள், நடைபாதைவியாபாரிகள், வீட்டுவேலை செய்பவர்கள், விவசாயிகள் ஆகியோருக்கென ஓய்வூதிய திட்டங்கள் செயல்பட்டுவருகின்றன. "யுனிவர்சல் பென்சன் ஸ்கீம்" எனும் பொதுவான ஓய்வூதியத் திட்டத்தை மத்திய தொழிலாளர் துறை அமைச்சகம் பரிசீலித்து வருகிறது. இதுமாதசம்பளம்பெறுபவர்களும், சுயதொழில் செய்பவர்களும் இணைந்து பயனடையக்கூடியதாக அமையும். இருப்பினும், ஊழியர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு போல கட்டாயம் பங்குபெற வேண்டிய தேவையில்லை; விருப்பமுள்ளவர்கள் மட்டுமே இதில் இணைந்துபயனடையலாம். மேலும், இந்தத்திட்டத்தில்மத்திய அரசு எந்தவகையிலும் நிதிபங்களிப்பு செய்யாது என்பதும் குறிப்பிடத்தக்கது. தொழிலாளர் துறை அமைச்சகம் இது தொடர்பாக ஆலோசித்து வரும் நிலையில், விரைவில் அதிகாரப்பூர்வ முடிவுகள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பிறந்தநாள் விழாவில் பேசிய சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.ஜி அருண்குமார்




முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 77-வது பிறந்தநாளை முன்னிட்டு கோவை கவுண்டம்பாளையம் தொகுதி பொதுக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.ஜி. அருண்குமார் பேசினார். உடன், மேட்டுப்பாளையம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் ஏ.கே.செல்வராஜ், கோவை புறநகர் வடக்கு மாவட்ட அண்ணா தொழிற்சங்க பேரவை செயலாளர் ஒகே சின்னராஜ், சிறப்பு பேச்சாளர்கள் சிட்கோ சீனு, முத்து மாணிக்கவேல், தகவல் தொழில்நுட்ப பிரிவு மண்டல செயலாளர் விக்னேஷ், சார்பணி மாவட்ட செயலாளர் ஜெகன், ஒன்றிய செயலாளர் ஜெயராம், உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, கிளை நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பிறந்தநாள் விழாவில் அன்னதானம் வழங்கிய கே.ஆர்.ஜெயராம்




முன்னாள் முதல்வர் ஜெயலலிதா 77-வது பிறந்தநாளை முன்னிட்டு கோவை சிங்காநல்லூர் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில், கொடியேற்றுதல், அன்னதானம் மற்றும் நல திட்ட உதவிகள் வழங்கினார் சட்டமன்ற உறுப்பினர் கே.ஆர்.ஜெயராம். உடன், கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்றனர்.

## முதல்வரிடம் வாழ்த்து பெற்ற நா.கார்த்திக் தம்பதியினர்




கோவைமாநகர் மாவட்ட திமுக செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான நா.கார்த்திக் மற்றும் அவரது மனைவியும் மாநகராட்சி கிழக்கு மண்டல தலைவருமான இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக் ஆகியோர் தங்களது திருமண நாளை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் அவரது மனைவி துர்கா ஸ்டாலின் ஆகியோரை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

## கோவையில் பம்ப் உற்பத்தியாளர்கள் சந்திப்பு

சீமா, சிட்டார்க் & கோயிண்டியா ஆகியவை கோயிண்டியா ஆடிட்டோரியத்தில்பம்ப்உற்பத்தியாளர்கள் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தன. கோவையில் உள்ள அனைத்து பம்ப் உற்பத்தியாளர்களும் அழைக்கப்பட்டனர்.

கட்டாயபிஇஇநட்சத்திர லேபிளிங்கில் விளக்கக்காட்சி நடைபெற்றது.

1/1/26 முதல் தயாரிக்கப்படும் அனைத்து பம்ப்களிலும் நட்சத்திர லேபிளிங் கட்டாயமாக இருக்க வேண்டும் என்பதால் இந்த தலைப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது.

175 உற்பத்தி நிறுவனங்களில் இருந்து 250க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் வந்திருந்தனர்.

சீமா தலைவர் மிதுன் ராம்தாஸ், சிடார்க் தலைவர் கே. மோகன் செந்தில் குமார், ஐபிஎம்ஏ தலைவர் ஸ்ரீ. கே.வி. கார்த்திக், சீமா தொழில்நுட்பக் குழுத் தலைவர் டாக்டர் சி.முருகேசன் ஆகியோர், ஸ்டார் லேபிளிங் திட்டம், அதன் வாய்ப்புகள் மற்றும் சவால்கள் குறித்து விளக்கமளித்தனர்.

இது உற்பத்தியாளர்களுக்குஒருவிழிப்புணர்வாக அமைந்தது. உற்பத்தியாளர்களின் பல்வேறு கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

சவால்களை சமாளிக்க சங்கங்களின் உதவியை கலந்து கொண்டவர்கள் கோரினர். உற்பத்தியாளர்கள் பல பிராண்டுகளுக்கு சப்ளை செய்யும் போது நட்சத்திர அடையாளத்தைப் பெறுவதில் உள்ள சவால்களையும் விளக்கினர்.

நட்சத்திர லேபிளிங் தடையின்றி மாறுவதற்கு, உறுப்பினர்களுக்கு வழிகாட்டுவதாகவும், அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதாகவும் சங்கங்கள் உறுதியளித்தனர்.

## திடீரென்று திமுக கூட்டத்தில் கலந்து கொண்ட வடிவேலு



அரசியலில் இருந்து ஒதுங்கியிருந்த நடிகர் வடிவேலு, திடீரென சென்னையில் திமுக பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டார். நேற்றிரவு சென்னைகிழக்குமாவட்ட திமுக சார்பில்நடைபெற்றநிகழ்ச்சியில் கலந்து கொண்டு மேடையில் பேசிய நடிகர் வடிவேலு, தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் மூத்த மகனாக உள்ளார் முதல்வர் ஸ்டாலின்.

வெற்றி திருமகள் முதல்வர் ஸ்டாலினை எந்நேரமும் பற்றிக்கொண்டிருக்கிறாள் என்பது நன்றாக தெரிகிறது. எதிர்வரும் 2026 சட்டப்பேரவை தேர்தலிலும் முதலமைச்சராக மு.க.ஸ்டாலின்தான் வென்று ஆட்சியில் அமர்வார். 200 தொகுதிகளுக்கு மேல் தி.மு.க கூட்டணி வெல்லும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார். இந்தி திணிப்பு விவகாரத்தை விலங்குகளோடு ஒப்பிட்டு கடுமையாக விமர்சித்த வடிவேலு, "காக்கா.. காக்கா மாதிரி தானே கத்தும்.. கிளி மாதிரியா கத்தும்.." அதோட தாய் மொழியிலதான் கத்தத் தெரியும். காகத்தை கிளி மாதிரி கத்த வைக்க முடியாது" என்றார்.

யார்யாருக்குஎன்னவேணுமோஅதைகத்துக்கட்டும்என்று பேசிய வடிவேலு, ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒரு கலாசாராம், மொழி இருக்கு. எதையும் கட்டாயப்படுத்தாதீங்கயா என்று கூறி கையெடுத்து கும்பிட்டார். மேலும், தமிழ்நாட்டுக்கு அடையாளம் தமிழ் மொழிதான் என்றும், யாருக்கும் எந்த மொழியையும் கட்டாயப்படுத்தி திணிக்க முடியாது என்றும் கூட்டத்தில் வடிவேலு பேசினார்.

## நேரு நகரில் புதிய மருதம் செர்ரி பிளாசம் அடுக்குமாடி குடியிருப்புகள்

கோவை நேரு நகரில் சந்திரகாந்திபப்ளிக்பள்ளி அருகில் மருதம் செர்ரி பிளாசம் என்ற பெயரில் 39 அடுக்குமாடிகுடியிருப்புகள் விற்பனைக்கு உள்ளன.

இந்த வீடுகள் திடமான RCC கட்டமைக்கப்பட்ட அமைப்பு, பிராண்டட் விட்ரிஃபைட் டைல்ஸ், பால்கனி,பயன்பாடுமற்றும் கழிப்பறைகளுக்கான ஆண்டி ஸ்கிட் டைல்ஸ், ஃப்ளஷ் டேங்க், ஹெல்த் ஃபாசெட், பளபளப்பான ஷட்டருடன் கூடிய நல்ல தரமான மரத்தால் ஆன கதவுகள், அனைத்து கழிப்பறைகள் மற்றும் வீட்டு உபயோகத்திற்கு ஆழ்துளை கிணறு நீர் மற்றும் சமையலறைக்கு மட்டுமே மாநகராட்சி நீர் விநியோகம், கார் பார்க்கிங் பகுதியில் கிரானோலிதிக் தளம், அனைத்து படுக்கையறைகளிலும் நல்ல தரமான மாடுலர் சுவிட்சுகள் & ஸ்பிலிட் ஏசி வசதிகளுடன் கூடிய மறைக்கப்பட்ட வயரிங், 8 பயணிகள் தானியங்கி லிஃப்ட் உள்ளிட்ட வசதிகளுடன் வருகிறது.

மேலும் விவரங்கள் அறிய 92444 05632/ 92444 01632 எண்களில் தொடர்பு கொள்ளலாம்.



கோவை மாவட்டம் சூலூர் வட்டாச்சியர் அலுவலகம் முன்புள்ள அரசு (கச.என்.422/15) இடத்தை அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்ய ஒரு தரப்பினர் முயற்சி செய்ததால் அனைத்து இந்து அமைப்பு மற்றும் பொதுமக்களும் சூலூர் வட்டாட்சியரிடம் மனு அளித்தனர். நடவடிக்கை எடுப்பதாக வட்டாட்சியர் கூறியதையடுத்து அனைவரும் கலைந்து சென்றனர்.

## வானிலை ஆய்வு மையத்தின் புதிய பெண் தலைவராக அமுதா நியமனம்

இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல தலைவர் பாலச்சந்திரன் . இவர் பணி ஓய்வு பெற்றதையடுத்து வானிலை ஆய்வு மையத்தின் புதிய தலைவராக அமுதா பொறுப்பேற்கிறார். அமுதா சுமார் 34 ஆண்டுகளாக வானிலை ஆய்வு மையத்தில் பணிபுரிந்து வருகிறார். அமுதா வடகிழக்கு பருவமழை தரவுகளை ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்திய வானிலை ஆய்வு மையத்தின் கீழ் மொத்தமாக 6 மண்டல வானிலை ஆய்வு மையங்கள் இயங்கி வருகின்றன. அதன்படி சென்னை, கவுகாத்தி, கொல்கத்தா, மும்பை, நாக்பூர், டெல்லி ஆகிய 6 இடங்களில் மண்டல வானிலை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அந்த வரிசையில் சென்னை வானிலை ஆய்வு மையம் நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ளது.மழை, வெயில், தட்பவெப்ப நிலை போன்ற தகவல்களை வழங்கி வருகிறது. இதனால் வானிலை மைய இயக்குநர்கள் பள்ளி மாணவர்கள் மத்தியில் எப்போதும் பரீட்சயமானவர்களாகவே இருக்கின்றனர். தற்போது இயக்குநராக உள்ள பாலச்சந்திரன் ஓய்வு பெற உள்ள நிலையில் அவருக்கு பிறகு சென்னை வானிலை மையத்தின் புதிய தலைவராக அமுதா நாளை பொறுப்பேற்க இருப்பதாக கூறப்படுகிறது.




மஹா சிவராத்திரி முன்னிட்டு வழுவூரார் கிளாசிக்கல் பரதநாட்டியம் நுண்கலை மையம் சார்பில் 7வது வழுவூரார் கலை விழா 2025 கோவை வெள்ளலூரில் சக்தி விநாயகர் உடனமர் தையல்நாயகி வைத்தீஸ்வரன் கோவிலில் நடந்தது, இதில் மாணவியரின் நடனம் பார்வையாளர்களை பரவசப்படுத்தியது.

## அடுத்த கும்பமேளாவுக்கு கங்கை நதி இருக்காது

### அதிர்ச்சி தகவல் அளிக்கும் ஆய்வாளர்



கும்பமேளா நிகழ்வு என்பது கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய ஆறுகள் ஒன்றாக கூடும் திரிவேணி சங்கமத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் நிகழ்வாகும். கடந்த ஜனவரி 13ஆம் தேதி தொடங்கி பிப்ரவரி 25 ஆம் தேதி முடிவடைந்தது.

இதுவரை சுமார் 65 கோடி பேர் உத்திர பிரதேசம் மாநிலம் அலகாபாத் மாவட்டத்தில் பிராக்யராஜில் உள்ள திரிவேணி சங்கமத்தில் புனித நீராடியுள்ளனர். கடைசி நாளில் மட்டும் ஒரு கோடிக்கும் அதிகமானோர் பிராக்யராஜில் நீராடினர்.

இப்படியான சூழலில் பருவநிலை ஆர்வலர் ஒருவர் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதில் அடுத்த மகா கும்பமேளா நிகழ்வின் போது ஆறுகள் அழியும் நிலை உள்ளது. இதனால் அப்போது மகா கும்பமேளா மணலில் நடைபெறும் அபாயம் உள்ளது. இதனை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

லடாக்கை சேர்ந்த பருவநிலை ஆர்வலர் சோனம் வாங்சுக், பருவநிலை மாற்றம் குறித்து பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில், கூறியுள்ளதாவது, இமயமலை தற்போது வேகமாக உருகி வருகிறது. இமயமலை அடிவாரத்தில் இருந்து தான் கங்கை, யமுனை, பிரம்மபுத்திரா, சிந்து, சட்லஜ் நதி ஆகியவை உருவாகி வருகின்றன. இந்தியா, தனது பனிப்பாறைகளைப் பாதுகாப்பதில் முக்கிய பங்காற்ற வேண்டும்.

அதோடு அப்பகுதியில் உள்ள காடுகளும் அழிக்கப்பட்டு வருகிறது. இதே நிலை தொடர்ந்தால், சில ஆண்டுகளில் நமது புனித நதிகளான கங்கை, பிரம்மபுத்திரா மற்றும் சிந்து ஆகியவைஎன்பதுபருவகாலநதிகளாக மாறிவிடும். அதாவது மழைபெய்தால் ஆறுகளில் தண்ணீர் இருக்கும். மழை இல்லை என்றால் ஆற்றில் தண்ணீர் இல்லை என்ற நிலை உருவாகும்.

இதன் பொருள் அடுத்த மகா கும்பமேளாவில் புனித நதிகளில் மணல் படுக்கை மீது தான் கும்பமேளா நிகழ்வு நடக்கக்கூடும் - இமயமலை பனிப்பாறைகளின் உருகும் நிலையை மதிப்பிடுவதற்கு மத்திய அரசு ஒரு ஆணையத்தை அமைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

## ஜமீன் பரம்பரையில் பிறந்த அப்பா பைத்தியம் சாமிகள்

தி கோவை ஹெரால்டு



அப்பா பைத்தியம் சாமிகள் சுவாமிகளின் இயற்பெயர் முத்து. ஜமீன் பரம்பரையில் பிறந்தவர். 1859-ம் வருடம் சித்திரைத் திங்கள் 28-ம் நாள் புனர்பூச நட்சத்திரத்தில் கரூவூர் ஜமீன் குடும்பத்து வாரிசாக அவதரித்தார் .எட்டு மாத குழந்தையான சுவாமிகளை கண்டுணர்ந்த -பசிக்கு ஒதுங்கிய பரதேசி ஒருவர் "இது தெய்வக்குழந்தை" என்று அருள்வாக்கு சொல்லி மறைந்தார்.. சுவாமிகளின் எட்டாவது மாதத்தில் தன் தாயையும்,பதினாறாம் வயதில் தந்தையையும் இழந்தார்.

தன் தந்தையை இழந்தவுடன் தான் தனிமையாகி விட்டதாக உணர்ந்தார். யாரிடமும் சொல்லாமல் வீட்டை விட்டு கிளம்பி பழனி செல்லும் வண்டியை பிடித்து பழனி மலையை அடைந்தார். பழனியில் விநாயகர் கோயிலில் அமர்ந்து கொண்டு அழுதார். அப்போது ஆடையில்லாமல், பிச்சைக்காரர் போன்று அழுக்கான தோற்றமளித்த ஒருவர் வந்து நீ யார். ஏன் தனியாக அமர்ந்து அழுது கொண்டிருக்கிறாய், உன் தாய்-தந்தையர் எங்கே, என்று வினவினார். அவர் தான் தவத்திரு ஸ்ரீ அழுக்கு சுவாமிகள்..என்னுடன் வா என்றுசொல்லிசுவாமிகளை மூன்று நாட்கள் காடு,மலை எனறு எங்கெல்லாமோ அழைத்துச் சென்றார்.

கடைசியில் ஒரு குகைக்கு வந்தடைந்து -அதனுள்ளிருந்துஒருஏட்டுச் சுவடியை கொண்டு வந்து கொடுத்து சுவாமிகளை படிக்கச் சொன்னார். நீ ஆண்டவன் குழந்தை -உன் முன்னோர்கள் செய்த புண்ணியத்தால் நீ நாட்டுக்கு நல்லது செய்ய வந்துபிறந்துள்ளாய்"என்று சொல்லி சுவாமிகளின் பிறப்பின் இரகசியத்தை அறிவித்து சில நாட்களில் சமாதியானார்.


தனக்கு இருந்த ஒரே ஒரு ஆதரவும் மறைந்த பின் சுவாமிகள் அங்கிருந்து புறப்பட்டு கன்னியாகுமரி சென்றார். காடு மலைகளை சுற்றி திரிந்தார்.சுவாமிகள் ஊர் ஊராக சென்றார். மக்களின் குறைகளை தீர்த்து வைத்தார். தன்னை நாடி வந்தவர்களுக்கு இன்னருள் புரிந்தார். தன்னைமனதினில்இருத்தி தியானிப்பவர்களுக்கு கஷ்டங்களைப் போக்கி நல்லாசி வழங்கினார். பக்தர்கள் அவரை "அப்பா அப்பா" என்று தான் கூப்பிடுவார்கள். ஆனால் சுவாமிகள் தன்னை ஒரு பைத்தியம் என்று தான் சொல்லிக் கொள்வார்கள். அதனால் அவர் "அப்பா பைத்தியம் சுவாமிகள்" என்றே அழைக்கப்பட்டார்.

அழுக்கு சாமிகள் பொள்ளாச்சி வேட்டைக்காரன் புதூரில் ஜீவசமாதி அடைந்துள்ளார். சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு விழுப்புரம் பகுதியில் சுற்றி திரிந்த அப்பா பைத்தியசாமிகளை சில அன்பர்கள் புதுவைக்கு அழைத்து வந்தனர். 1995 வரை புதுவையில் தங்கியிருந்தார். அதன் பின் புதுவையில் இருந்து சாமிகள் பிற ஊர்களுக்கு சென்றார். சுவாமிகள் நிறைவாக தமது 141-ஆம் வயதில் சேலத்தில் உள்ள சூரமங்கலம் என்ற ஊரில் "சற்குரு மாளிகை" எனுமிடத்தில் பிரமாதி ஆண்டு 11.02.2000 தை அன்று 28-ம் நாள் அசுவினி நட்சத்திரத்தில் சமாதியானார். ஒரு முறை வந்து பாருங்கள்.

புதுவை முதல்-அமைச்சர் ரங்கசாமி அவர்களின் ஆன்மீக குரு அப்பா பைத்தியசாமிகள் ஆவார் .கடந்த 1990-ம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டு தோல்வி அடைந்திருந்த ரங்கசாமி அப்பாபைத்தியசாமிகளை சந்தித்தார்.தோல்வியினால் மன அழுத்தத்தில் இருந்த ரங்கசாமிக்கு சாமிகளின் வாக்கும் எதிர்கால கணிப்பும் மிகுந்த ஆறுதலை தந்தது. இதன் பிறகு அப்பாபைத்திய சாமிகளின் வாக்குப்படி ரங்கசாமி முதல்-அமைச்சர் ஆனார். சேலத்திற்கு அடிக்கடி சென்று ஜீவசமாதியை தரிசித்து வந்தார். பல்வேறு முக்கிய முடிவுகளை சேலம் சென்று அப்பாபைத்தியசாமிகளின் உத்தரவு பெற்றே எடுத்து வருகிறார்..

சுவாமிகள் நிறைவாக தமது 141-ஆம் வயதில் சேலத்தில் உள்ள சூரமங்கலம் என்ற ஊரில் "சற்குரு மாளிகை" (தருகவிலாஸ்) எனுமிடத்தில் பிரமாதி ஆண்டு 11.02.2000 தை அன்று 28-ம் நாள் அசுவினி நட்சத்திரத்தில் சமாதியானார்.

# லட்சியத்தோடு இயங்கும் ஞானி சத்குரு; அமித்ஷா புகழாரம்





தி கோவை ஹெரால்டு

கோவை ஈஷா யோகா மையத்தில் நேற்று பிப்ரவரி 26 ஆம் தேதி மஹா சிவராத்திரி விழா தொடங்கி அடுத்த நாள் காலை 6 மணி வரை கோலாகலமாக நடைபெற்றது.

இந்த விழாவில் கலந்து கொள்வதற்காக மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா கோவை பீளமேடு விமானநிலையத்திற்கு வருகை தந்தார்.அங்கு வருகை தந்த அவருக்கு பாஜக மாநில தலைவர் அண்ணாமலை மற்றும் கட்சியினர் உற்சாக வரவேற்பு அளித்தனர். அதனைத்தொடர்ந்து, ஈஷா மையத்திற்கு 26 ஆம் தேதி மாலை 6 மணிக்கே வருகை தந்தார். அமித்ஷாலை, சத்குரு திருவைந்தெழுத்து மகா மந்திரத்தைதீட்சையாகவழங்கி வரவெற்றார். தொடர்ந்து, அங்கிருந்ததியானலிங்கத்திற்கு விசேஷ ஆராதனை செய்து அமித்ஷா வழிபாடு செய்தார். அதைப்போல, பைரவிதேவிக்கு சிறப்பு பூஜை செய்ததுடன், சத்குருவுடன்சேர்ந்துநாகபூஜை வழிபாட்டிலும் பங்கேற்றார்.

பிறகு மக்களுக்கு மத்தியில் பேசிய அமித்ஷா, மகாசிவ ராத்திரி விழாவை பக்தியின் மகாகும்பமேளா போன்று நடைபெறுவது மகிழ்ச்சியாக இருக்கிறது. சத்குரு ஒரு லட்சியத்தோடு இயங்கும் ஞானி . அந்த அளவுக்கு சிறப்பாக பணியாற்றி கொண்டு இருக்கிறார். உலகத்தை மாற்ற வேண்டும் என்றால், முதலில் நம்மை மாற்ற வேண்டும். இதனை நமக்கு சத்குரு உணர்த்தி வருவதாக நான் நினைக்கிறேன். மண் காப்போம் இயக்கத்தில் சத்குரு எடுத்த முயற்சிகளை பற்றி நான் சொல்லவேண்டாம். அதற்காகவும் அவருக்கு நான் பாராட்டுகளை இந்த நேரத்தில் தெரிவித்து கொள்கிறேன். ஆதியோகி தரிசனம் பெரும் பாக்கியம் . யோகா, தியானத் தால் ஈஷா பல லட்சம் மக்களை நல்வழிப்படுத்தி வருகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த விழாவில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி, தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை, ஒடிசா மாநில ஆளுநர் ஹரிபாபு கம்பஹம்பதி, பஞ்சாப் மாநில ஆளுநர் குலாப் சந்த் கட்டாரியா, கர்நாடக மாநில துணை முதல்வர் டி.கே. சிவகுமார், மத்திய சட்ட மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால், மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை இணை அமைச்சர் எல். முருகன், புதுச்சேரி அமைச்சர் நமச்சிவாயம், மகாராஷ்டிரா மண் மற்றும் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் சஞ்சய் ரதோட் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.பண்ணாரிகுழுமத் தலைவர் பாலசுப்ரமணியன், சோழமண்டலகுழுமத்தலைவர் வேலையன் சுப்பையா, அப்பல்லோ குழுமத்தை சேர்ந்த சங்கீதா ரெட்டி, திரைத்துறையை சேர்ந்த நடிகர்கள் சந்தானம், தமன்னா, விஜய் வர்மா, திரைப்பட இயக்குனர் ஓம்பிரகாஷ்மெஹ்ரா உள்ளிட்டவர்களும், இந்திய கால்பந்து அணியின் முன்னாள் கேப்டன் பாய்ச்சங் பூட்டியா ஆகியோரும் பங்கேற்றனர்.

இந்த நிகழ்ச்சியில் இந்தியா மட்டுமின்றி வெளி நாடுகளை சேர்ந்த ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் பாரடாக்ஸ், சுபா ராகவேந்திரா, சத்ய பிரகாஷ், முக்ததன் கட்வி, காஸ்மே உள்ளிட்ட பல்வேறு கலைஞர்கள் பங்கேற்றனர். இரவு முழுதும் கலைநிகழ்ச்சிகள் மற்றும் பக்தி பாடல்கள் நடைபெற்றது. அங்கு வந்துள்ள அனைவருக்கும் மகா அன்னதானம் வழங்கப்பட்டது

## ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் சான்றிதழ் நிகழ்ச்சி




தி கோவை ஹெரால்டு


கோவை ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் தொற்று தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு பிரிவு துறை சார்பில் "சுகாதார பராமரிப்பில் மேற்பரப்பு சுத்தம் மற்றும் கிருமி நீக்கம்" என்ற தலைப்பில் சான்றிதழ் நிகழ்ச்சி நடைபெற்றது.

அங்கீகாரம் பெற்ற மருத்துவமனை அமைப்புகளின் கூட்டமைப்பு சார்பில் நடந்த இந்த நிகழ்ச்சியில், சுகாதாரத்துடன் தொடர்புடைய நோய்த்தொற்றுகள் பரவுவதில் சுற்றுச்சூழல், மாசுபாட்டின் முக்கியத்துவம், சுகாதார தொற்று கட்டுப்பாட்டு திட்டத்தின் கட்டமைப்பிற்குள் சுத்தம் செய்தல் மற்றும் கிருமி நீக்கத்தை திறம்பட செயல்படுத்துவதன் அவசியம் ஆகியவை வலியுறுத்தப்பட்டன.

மேலும், இந்த பயிற்சி நிகழ்ச்சி பங்கேற்பாளர்களை பற்பல செயல்பாடுகளுக்கு வழிநடத்தி, நோயாளி பராமரிப்புக்கான சுத்தமான மற்றும் பாதுகாப்பான சூழலை உறுதிசெய்யும் முறைகள் குறித்து முன்னோட்டம் அளித்தது. கோவை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள பல்வேறு மருத்துவமனைகளில் இருந்து 75க்கும் மேற்பட்ட நபர்கள் இதில் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.




## விண்வெளிக்குச் செல்கிறார் பிரபல பின்னணிப் பாடகி கேட்டி பெர்ரி




பிரபல பின்னணிப் பாடகி கேட்டி பெர்ரி மற்றும் 2 பெண் செய்தியாளர்கள் குழுவினர் அமேசான் நிறுவனர் ஜெஃப் பெசோஸ் விண்கலம் மூலமாக விண்வெளிப் பயணம் மேற்கொள்ள இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. ஹாலிவுட் மட்டுமின்றி இந்தியாவிலும் மிகப் புகழ்பெற்ற பாடகியான கேட்டி பெர்ரி புளூ ஆரிஜினின் என்எஸ்-31 திட்டத்தின் மூலம் புதிய வரலாறு ஒன்றைப் படைக்க உள்ளார்.

அந்தத் திட்டத்தின் மூலம் 1963ம் ஆண்டு விண்வெளிக்குச் சென்ற வலண்டீனா தெரெஸ்க்கோவாவுக்கு பின்னர் பெண்கள் மட்டும் அடங்கிய ஒரு குழுவினர் விண்வெளிக்குப் பயணம் மேற்கொள்ளவிருக்கின்றனர். இவர்கள் நியூ ஷெபர்ட் விண்கலம் மூலம் செப்டம்பர் மாதத்தில் விண்வெளிக்குச் செல்லவுள்ளனர்.

இது குறித்து கேட்டி பெர்ரி "எனது பயணம் எனது மகளையும் மற்றவர்களையும், நட்சத்திரங்களை எட்ட ஊக்குவிக்கும் என நம்புகிறேன்" எனத் தெரிவித்துள்ளார். இந்தத் திட்டத்துக்கு ஜெஃப் பெசோஸின் வருங்கால மனைவியும் மூத்த செய்தி நிருபருமான லாரன் சான்செஸ் தலைமை தாங்குவார்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவருடன் கேட்டி பெர்ரி, சிபிஎஸ் தொகுப்பாளர் கெய்ல் கிங், மனித உரிமைகள் ஆர்வலர் அமண்டா நுயென், திரைப்பட தயாரிப்பாளர் கெரியான் ஃப்ளைன் மற்றும் முன்னாள் நாசா விஞ்ஞானி ஆயிஷா போவ் முக்கிய நபர்களும் இணைந்துள்ளனர்.இந்த விண்கலம் மூலம் ஊடகம், அறிவியல், கலை உட்பட பல்வேறு துறைகளைச் சார்ந்த பெண்கள் விண்வெளி வீராங்கனைகளாகப் பயணிக்க இருப்பது குறிப்பிடத்தக்கது.




## கின்னஸ் புத்தகத்தில் மஹா கும்பமேளா

உத்தரப்பிரதேச மாநிலத்தில் பிரயாக்ராஜ் நகரில் ஜனவரி 13ம் தேதி தொடங்கி 45 நாட்கள் மகா கும்பமேளா விமரிசையாக நடைபெற்றது. 144 வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் இந்த மகா கும்பமேளா உலகின் மிக பெரிய ஆன்மிக திருவிழாவாக அனுசரிக்கப்பட்டது உலகம் முழுவதும் இருந்து 65 கோடிக்கும் அதிகமானோர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடியுள்ளனர். திரிவேணி சங்கமம் என்று அழைக்கப்படும் கங்கா, யமுனா, சரஸ்வதி ஆகிய மூன்று நதிகள் ஒன்றுகூடும் இடத்தில் புனித நீராடினால் மோட்சம் கிடைக்கும் என நம்பப்படுகிறது.

கும்பமேளா ஆரம்பம் முதலே பக்தர்கள் கூட்டம் அலைமோதிய நிலையில் நாளுக்கு நாள் பக்தர்கள் வருகை அதிகரித்துக்கொண்டே இருந்தது. கும்பமேளா நடைபெறும் பிரயாக்ராஜ் நகரை இணைக்கும் சாலைகள், ரயில் நிலையங்கள் அனைத்தும் பக்தர்களால் நிரம்பி வழிந்தன. அரசியல் கட்சி தலைவர்கள், திரை பிரபலங்கள் முதல் பொதுமக்கள் வரை பலரும் திரிவேணி சங்கமத்தில் நீராடினர். பிரதமர் மோடி, குடியரசு தலைவர் திரௌபதி முர்மு, உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோரும் மகா கும்பமேளாவில் கலந்து கொண்டு புனித நீராடினர். இந்த கும்பமேளா நிகழ்வில் பல சுவாரசிய நிகழ்வுகளும் நடைபெற்றது.

இறுதி நாளான பிப்ரவரி 26ம் தேதி கோலாகலமாக நிறைவடைந்தது. இதுவரை சுமார் 66 கோடிக்கும் அதிகமான பக்தர்கள் திரிவேணிசங்கமத்தில்புனித நீராடியதாக கூறுகின்றனர். அதேபோல் இனி அடுத்த மகா கும்பமேளா 2169ம் ஆண்டுதான் நடைபெறும் எனவும் கூறுகின்றனர். இந் நிலையில், புதிய சாதனைகள் கின்னஸ் அமைப்பால் உலக சாதனையாக அங்கீகரிக்கப்பட்டன.

ஒற்றுமை, சமூக நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் 80 அடி நீளம், 5 அடி அகல துணியில் 10,000 பேர் பங்கேற்றுகையால்வரைந்த ஓவியம்; 15,000 தூய்மை பணியாளர்கள் இணைந்து ஒரே நேரத்தில் விழா நடந்த இடத்தில் தூய்மை பணி மேற்கொண்டது உள்ளிட்ட புதிய சாதனைகள் கின்னஸ் அமைப்பால் உலக சாதனையாக அங்கீகரிக்கப்பட்டன. இதற்கான சான்றிதழை முதல்வரிடம் கின்னஸ் அமைப்பினர் வழங்கினர். இதற்கு முன் 10,000 பேர் ஒரே நேரத்தில் தூய்மை பணி மேற்கொண்டதே பெரும் சாதனையாக இருந்தது.



# முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி இல்ல திருமண வரவேற்பு விழா

## முன்னாள் முதல்வர் எடப்பாடியார் பங்கேற்று மணமக்கள் விஜய் விகாஷ் – தீக்ஷனா–வை வாழ்த்துகிறார்

தி கோவை ஹெரால்டு






கழகத் தலைமை நிலைய செயலாளரும், கோவை புறநகர் தெற்கு மாவட்ட கழக செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சிகொறடாவுமான முன்னாள் அமைச்சர் எஸ்.பி. வேலுமணி அவர்களின் இல்ல திருமண வரவேற்பு விழா வருகிற மார்ச் 10-ஆம் தேதி திங்கட்கிழமை அவிநாசிசாலை கொடிசியா வளாகத்தில் அமைந்துள்ள ஏ.பி.சி. வளாகத்தில் மாலை 5 மணி முதல் 9 மணி வரை நடைபெறுகிறது.

முன்னாள் அமைச்சர் எஸ்.பி. வேலுமணி - வித்யாதேவி இவர்களின் மகன் விஜய் விகாஷ், சந்திரமோகன்-திருமாலினி இவர்களின் மகள் தீக்ஷனா திருமண வரவேற்பு விழாவானது கழகப் பொதுச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி கே. பழனிச்சாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்ச்சியில் தமிழகம் முழுவதிலும் இருந்து முன்னாள் அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழகத் தேர்தல் பிரிவு செயலாளரும், திருப்பூர் மாநகர் மாவட்ட கழக செயலாளருமான பொள்ளாச்சி வி.ஜெயராமன் எம்.எல்.ஏ, கோவை புறநகர் வடக்கு மாவட்ட கழக செயலாளர் பி.ஆர்.ஜி.அருண்குமார் எம்எல்ஏ, கோவை மாநகர் மாவட்ட கழக செயலாளர் அம்மன் கே.அர்ச்சுணன் எம்எல்ஏ, கழக அமைப்புச் செயலாளர்கள் ஏ.கே.செல்வராஜ் எம்எல்ஏ, செ.தாமோதரன் எம்எல்ஏ, ஒன்றிய கழக செயலாளர் விபி.கந்தசாமி எம்எல்ஏ, கழக இளைஞரணி துணைச் செயலாளர் டி.கே.அமுல் கந்தசாமி எம்எல்ஏ, மாநகர் மாவட்ட இளைஞரணி செயலாளர் கே.ஆர்.ஜெயராம் எம்எல்ஏ, மற்றும் முன்னாள் அமைச்சர்கள், அதிமுக சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், ஒன்றிய, பேரூராட்சி, நகர, பகுதி நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள் உள்பட ஏராளமான கலந்து கொள்கின்றனர்.

இத்திருமண வரவேற்பு விழாவிற்கு வருகை தரும் அனைவரையும் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி, வி.வித்யா தேவி, தாயார் மயிலாத்தாள், எஸ்.பி.அன்பரசன், எஸ்.ஏ.ஹேமலதா, எஸ்.பி. செந்தில்குமார் எஸ்.அனிதா, ஏ.எல். விவேக்-வைஷாலி, ஏஎல். விமல், வந்தனா, ரோகன், வேதா ஆகியோர் வரவேற்கின்றனர்.

# எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளையின் நிறுவனர் நாள் விழா கொண்டாட்டம்




▸ எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளையின் நிறுவனர் நாள் விழாவில் ஸ்ரீ ராமகிருஷ்ணா நிறுவனங்களில் பணியாற்றி 25 ஆண்டுகள் நிறைவு செய்த ஊழியருக்கு சிறப்பு விருந்தினர் சி.கோபிநாத் பரசினை வழங்கினார். உடன் எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் ஆர்.சுந்தர், கே.பி.ஆர்., குழும நிறுவனங்களின் தலைவர் கே.பி. ராமசாமி ஆகியோர் இருந்தனர்.

தி கோவை ஹெரால்டு

எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளை கடந்த 1970-ம் ஆண்டு, மறைந்த எஸ்.என். ரங்கசாமி நாயுடுவால் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வறக்கட்டளையின் கீழ் மருத்துவம், கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட 18 நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இதன் நிறுவனர் நாள் விழா ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

நிறுவனர் நாள் விழா கோவைஸ்ரீராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் உள்ள,எஸ்.என்.ஆர்.கலையரங்கில் நடைபெற்றது.

எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் ஆர்.சுந்தர் தலைமை வகித்து, வரவேற்புரை வழங்கினார்.

விழாவிற்குச் சிறப்பு விருந்தினராகத் தொலைக்காட்சிநிகழ்ச்சித் தொகுப்பாளர் சி.கோபிநாத் கலந்து சிறப்பு சொற்பொழிவாற்றினார்.

பின்னர் கோவை கே.பி. ஆர்., குழும நிறுவனங்களின் தலைவர் கே.பி. ராமசாமி சிறப்பு அழைப்பாளராகக்கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

அதைத்தொடர்ந்து ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை மற்றும் கல்வி நிறுவனங்களில் பணியாற்றி 25 ஆண்டுகள் நிறைவு செய்த மருத்துவர்கள், பேராசிரியர்கள், ஊழியர்கள் மற்றும் பிறபணியாளர்கள் 14பேரை கௌரவித்து விருதுகள் வழங்கினார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர் ஏ.சௌந்தர்ராஜன் நன்றி கூறினார்.

# தந்தையை போலவே இருக்கும் பிரபு தேவா மகன்



தமிழ் சினிமாவில் நடிகர், இயக்குனர், நடன கலைஞர் என பன்முக திறமைகளை கொண்டு ரசிகர்கள் மத்தியில் பெரும் பிரபலமாக திகழ்பவர் பிரபுதேவா. இவரது நடனத்திற்கும் இன்றும் தமிழகத்தில் பலக் கோடி ரசிகர்கள் இருக்கிறார்கள். இவர் இயக்கிய படங்கள் நினைத்துபார்க்க முடியாத அளவிற்குபலவெற்றிகளை கொடுத்துள்ளது.

இபிரபுதேவா தனது நடனகுழுவில் பணியாற்றி வந்த ரமலத் என்ற பெண்ணை காதலித்து 1995-ல் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு இரண்டு மகன்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவர்உடல்நலகுறைவால் சில வருடங்களுக்கு முன் உயிரிழந்து விட்டார். பின்னர் கடந்த 2011-ல் இருவருக்கும் இடையே விவாகரத்து ஏற்பட்டது.

தற்போது பிரபுதேவா முதல் மனைவியை விவாகரத்து செய்துவிட்டு வேறு ஒரு திருமணம் செய்துக்கொண்டுவாழ்ந்து வருகிறார்.

இந்நிலையில், பிரபு தேவா சினிமாவை போல் சமூக வலைத் தளங்களிலும் ஆக்டிவாக இருந்து வருகிறார். பிரபு தேவா சமீபத்தில் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் மகனுடன் கலந்து கொண்ட நடன நிகழ்ச்சி வீடியோ மற்றும் மகனுடன் எடுத்துகொண்ட புகைப்படத்தையும் வெளியிட்டுள்ளார். இதை இணையத்தில் பார்த்த அவரதுரசிகர்கள்,"அடுத்த பிரபுதேவாவா இவர்? அச்சு அசல் அப்பா போலவே இருக்காரே.." என்று வியந்துள்ளனர்.

# கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியில் ஆண்டுவிழா

தி கோவை ஹெரால்டு




கோவை கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியின் ஆண்டுவிழா கல்லூரி வளாகத்தில் உள்ள முனைவர் மாரப்பகவுண்டர் ஆறுச்சாமி கலையரங்கில் நடைபெற்றது.

இவ்விழாவில் கான்பூர், இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தின் இயந்திரப் பொறியியல்துறையின்பேராசிரியர் முனைவர் நச்சிகேதா திவாரி அவர்கள் சிறப்பு விருந்தினராகப்பங்கேற்றுச் சிறப்புரையாற்றினார். இவ்விழாவில் கல்லூரியின் செயலர் மற்றும் இயக்குநர் டாக்டர் சி.ஏ.வாசுகி தலைமையுரையாற்றினார்.

கல்லூரியின் முதல்வர் முனைவர் வே.சங்கீதா ஆண்டறிக்கை வாசித்தார். முன்னதாகக் கல்லூரியின் மாணவர் பேரவைத் தலைவர் ஏ. அனில்குமார் வரவேற்புரையாற்றினார்.

முதல் மதிப்பெண் பெற்றமாணாக்கர்களுக்குச் சான்றிதழ்களையும் சிறந்த துறை, சிறந்த ஆராய்ச்சித்துறைஆகியவற்றுக்கான சுழற்கோப்பைகளையும் சிறப்பு விருந்தினர் வழங்கினார். அதனைத் தொடர்ந்து மாணவர் பேரவையின் செயலர் வி.தர்ஷினி நன்றியுரையாற்றினார்.

விழாவின் நிறைவில் மாணாக்கர்களின் கண்கவர்கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

# ஒரு பிளேட் விலை 1,200... ஆனால், உட்கார சேர் இல்லையோ...

**விஜய் கட்சி நிகழ்ச்சியில் சர்ச்சை**



தமிழக வெற்றிக் கழக ஆண்டு விழாவில் பங்கேற்றவர்கள் சாப்பிடுவதற்கு, தலைக்கு 1,200 ரூபாய் செலவிட்ட நிலையில், பலரும் சேர் இல்லாமல் நின்று கொண்டே சாப்பிட்டதுதான் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

த.வெ.க., இரண்டாம் ஆண்டு துவக்க விழா மாமல்லபுரம் அடுத்த பூஞ்சேரியில் உள்ள, 'போர் பாயின்ட் ஷெரட்டன்' தனியார் சொகுசு விடுதியிலுள்ள மண்டபத்தில், கடந்த 26 ஆம் தேதிநடந்தது. அரங்கையும், விழா ஏற்பாடுகளையும் பார்த்து, கட்சி நிர்வாகிகள் அசந்து போயினர். உணவு உபசரிப்பும் அதேபோல இருக்கும் என எதிர்பார்த்தனர். அன்றைய தினம் சிவராத்திரி என்பதால், அசைவ உணவுகளை தவிர்த்து, சைவ உணவுகள் பரிமாறப்பட்டன.

கேரட் அல்வா, பாதாம் பாயசம், வெஜ் பிரியாணி, பூரி, மசால் வடை உள்ளிட்ட, 25 வகையான மெனு பரிமாறப்பட்டது . அதன்படி, 4,500 பேருக்கு உணவுகள் தயாரிக்கப்பட்டன. அனைவரும் அமர்ந்து சாப்பிடும் வகையில் வாழை இலை போட்டு பந்தி பரிமாறவும் திட்டமிடப்பட்டிருந்தது.

இதற்காக சொகுசு விடுதி வளாகத்தில், மூன்று உணவு பந்தல்கள் அமைக்கப்பட்டு இருந்தன. மகளிருக்கு தனியாக இடவசதி ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. நிகழ்ச்சிக்கு வந்தவர்கள் அரங்கில் அமர்வதற்கு போதிய சேர்கள் இல்லை இதனால், உணவு பந்தலில் இருந்த சேர்கள், அரங்கிற்கு எடுத்து செல்லப்பட்டன. அரங்கில் நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தபோது, உணவு பரிமாற தொடங்கினர். வாழை இலையில் உணவுகள் வைக்கப்பட்டிருந்தன. ஆனால், உட்கார்ந்து சாப்பிட நாற்காலிகள் இல்லை. இதனால், பலரும் நின்று கொண்டே சாப்பிட்டனர்.

தலைக்கு 1,200 ரூபாய் தலைவர் விஜய் செலவழித்தும் சேர் இல்லையே' என்ற த.வெ.க கட்சியினர் பலரும் வீடியோவாக பரப்பினர். இதனால், விஜய் அதிர்ச்சி அடைந்துள்ளார். இதனால் கோபம் அடைந்த நடிகர் விஜய், விழா ஏற்பாடுகளில் சொதப்பிய நிர்வாகிகளை அழைத்து கடுமையாக கண்டித்ததாகவும் கூறப்படுகிறது.

# உங்கள் வாகனத்தில் பெட்ரோல் இல்லையா?

## இந்தியன் ஆயில் நிறுவனத்தின் புதிய வசதி

தி கோவை ஹெரால்டு



இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம்... ஃபியுயல்@கால் (Fuel@Call) என்ற ஆப்பை அறிமுகம் செய்து உள்ளது.

இந்த ஆப் மூலமாக, நீங்கள் எங்கிருந்து வேண்டுமானாலும் ஆன்லைனில் பெட்ரோல் அல்லது டீசலை ஆர்டர் செய்துகொள்ள முடியும். இந்த ஆப்பை கூகுள் பிளே ஸ்டோரில் இருந்தோ அல்லது ஆப் ஸ்டோரில் இருந்தோ டவுன்லோடு செய்து பயன்படுத்தலாம். பயணம் செல்லும் வழியில் பெட்ரோல் அல்லது டீசல் காலியாகி வாகனம் நின்று விட்டால், உடனடியாக இந்த ஆப்பைபயன்படுத்தி ஆன்லைனில் உங்களுக்கு அருகில் இருக்கும் பெட்ரோல் பங்கில் பெட்ரோல் அல்லது டீசல் ஆர்டர் செய்யலாம்.

உடனடியாக உங்களுக்கு ஒரு ஓடிபி அனுப்பப்படும். உங்களுக்கு 'ஓடிபி' வந்ததும் ஆர்டர் கன்ஃபார்ம் செய்தால், அருகில் இருக்கும் பெட்ரோல் பங்கிலிருந்து, வாகனம் மூலம் நீங்கள் இருக்கும் இடத்திற்கே பெட்ரோலை கொண்டு வந்து வருவார்கள். உங்களுக்கு வந்திருக்கும் ஓடிபி எண்ணை அவர்களிடம் கூறினால் போதும், பெட்ரோல் அல்லது டீசலை நிரப்பி தருவார்கள். யுபிஐ, டெபிட் கார்டு அல்லது கிரெடிட் கார்டு வழியாக பணம் செலுத்தலாம். அதே வேளையில், நீங்கள் உங்களின் ஆர்டரை கேன்சல் செய்தால். அதற்கு ரூபாய் 100 அபராத கட்டணமாக வசூல் செய்து விடுவார்கள்.

இந்த ஆப்பில் அடுத்த பெட்ரோல் பங்க் எங்கு உள்ளது என்பது போன்ற தகவல்களையும் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். அதே போல் நீங்கள் ஆர்டர் செய்த பெட்ரோல் டீசலை எப்போது உங்களுக்கு கிடைக்கும் என்பதையும் உங்களால் போனில் ட்ராக் செய்ய முடியும். முன்னதாக, கனரக வாகனங்களுக்கு மட்டும் இந்த சேவையை வழங்கி வந்த இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், தற்போது அனைவருக்கும் இந்த சேவையை வழங்குகிறது.

# சூர்யா படத்துக்கு எதிர்ப்பு தெரிவித்த மக்கள்... படப்பிடிப்பு நிறுத்தம்



நடிகரும், இயக்குனருமான ஆர்ஜே பாலாஜி, தற்போது நடிகர் சூர்யாவுடன் இணைந்து பணியாற்றி வருகிறார். ஆர்ஜே பாலாஜி இயக்கத்தில் உருவாகும் படத்தில், நடிகர் சூர்யா நாயகனாக நடிக்கவுள்ளார். சூர்யாவின் 45 வது திரைப்படம் மிகப்பெரிய எதிர்பார்ப்புகளுடன் உருவாகி வருகிறது. இந்த படத்தின் படப்பிடிப்பு சென்னையில் உள்ள கிழக்கு கடற்கரை சாலையில் நடந்து வருகிறது.

ஈசிஆர் சாலையில், கேளம்பாக்கம் - வண்டலூர் சாலையில் உள்ள வெளிச்சை கிராம பகுதியில், திடீரென சாலைகளை மறித்தபடி படப்பிடிப்பு பணிகளுக்கான மேடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதனால் கிராம மக்கள் காவல்துறையினருக்கு தகவல் தெரிவிக்கவே, தகவல் அறிந்துவந்த கேளம்பாக்கம் காவல்துறையினர், படப்பிடிப்பு முதற்கட்ட பணிகளை தடுத்து நிறுத்தினர். மேலும், தாம்பரம் மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் உரிய முன் அனுமதி பெறுமாறு அறிவுறுத்தியதால், மேடை அமைக்கும் பணிகள் கைவிடப்பட்டன. விறுவிறுப்புடன் நடைபெற்று வரும் படப்பிடிப்பு பணிகளை முடித்து, செப்டம்பர் மாதம் சூர்யா 45 படத்தை வெளியிட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

Published by S.Kamalakannan Printed by S.Prabhakaran on behalf of Senthur Printers. Printed at Door No.7, Lakshmi Nagar, 2nd Street, Nallampalayam Road, New Sanganoor, Rathinapuri (Po), Coimbatore – 641027. Published from 27, Vinayagar Koil Street, Krishnaswamy Nagar, Ramanathapuram, Coimbatore – 641045. Editor K.Abirami.